
# மாணவர் வழிகாட்டி



வேலைவாய்ப்பிற்கான
துரித வழி




இந்த மாணவர் வழிகாட்டி பிப்ரவரி2026 இல் AAT இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது. சகல மாணவர்களும் இந்நூலினை இலவசமாக தரவிறக்கம் செய்ய முடியுமென்பதுடன் இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தில் தம்மையொரு மாணவராகப் பதிவுசெய்துகொள்ள இதனையொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக்கொள்ளவும் முடியும். அவ்வப்போது இந்நூலின் எப்பாகத்திலும் ஏற்படக்கூடிய மாற்றங்கள் மற்றும் சேர்ப்புக்கள் தொடர்பில் மாணவர்கள் கவனத்திற்கொள்ளல் வேண்டுமென்பதுடன் தம்மைத் தெளிவுபடுத்திக்கொள்ளல் அவசியம் என்பதுவும் மிகப்பொறுப்புடன் அறிவுறுத்தப்படுகிறது.

SRI LANKA

# CONTENTS


| | |
|---|---|
| இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம் | 04 |
| ஆளுகைப் பேரவையும், சிரேஷ்ட முகாமைத்துவமும் | 05 |
| மாணவர் பதிவு மற்றும் வழிகாட்டல் | 06 |
| AAT பதிவுக்கான நடைமுறைகள் | 07 |
| AAT பரீட்சைகளுக்கான விலக்களிப்புக்கள் | 09 |
| AAT புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக விலக்களிப்புக்கள் | 10 |
| மாணவர்களுக்கான முக்கியமான வழிகாட்டல்கள் | 13 |
| AAT அங்கத்துவம் | 14 |
| AAT பரீட்சைகள் | 15 |
| பரீட்சைக் கட்டமைப்பு | 17 |
| பரீட்சை செயன்முறை சொற்களின் பட்டியல் | 18 |
| வினாத்தாள்களின் கட்டமைப்பு | 19 |
| மாற்றுதிற்க்குரிய நடைமுறைகள் | 20 |
| பாடத்திட்டம் மற்றும் அதற்கான நேர ஒதுக்கீடு | 22 |
| AAT பரீட்சைக்கு தயாராகுதல் | 26 |
| AAT தகைமைக்குரிய விலக்களிப்புக்கள் | 27 |
| AAT அங்கத்துவத்திற்கான தொழில்முறை அனுபவங்கள் | 29 |
| AAT தொழில் வங்கி | 32 |
| AAT வியாபார துறை சார் பாடசாலை | 33 |
| AAT இனால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்கள் (AECs) | 34 |


## இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள்


மாணவர் பதிவிற்கான விண்ணப்பப்படிவம்

AAT பரீட்சைகளுக்கான விலக்களிப்பு

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## The Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம் 1987 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகத்தின் முன்னெடுப்பின் பேரில் இலங்கைக் கணக்கீட்டுத்துறை அபிவிருத்தியின் புதியதொரு யுகமாக தோற்றம் பெற்றது. இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகமானது 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்டு பின்னர் 2007 ஆம் ஆண்டு 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள்பதிவு செய்யப்பட்ட நிறுவகமாகும்.

இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகமானது 1989ம் ஆண்டு மே மாதம் சர்வதேச கணக்காளர் சம்மேளனத்தின் (IFAC) துணை உறுப்பினராக அங்கத்துவம் பெற்றது. சர்வதேச கணக்கீட்டு சம்மேளனமே சர்வதேச ரீதியில் கணக்காளர்களின் உயர் அங்கீகாரமுடைய நிறுவனமாகும். மேலும் இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகமே ஆசிய பசுபிக் கணக்காளர் சம்மேளனத்தின் (CAPA) முதலாவது இணை அங்கத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இது இந்த பிராந்தியத்தின் உயர் நிறுவனமாகும். இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம் 2015 முதல் CAPA வின் முழு உறுப்பினராக நிலை உயர்த்தப்பட்டுள்ளது.

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் ஆளுகைப் பேரவையானது இலங்கைப் பட்டயக்கணக்கறிஞர் நிறுவகத்தினால் நியமனம் பெறும் 8 உறுப்பினர்களையும் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதர அபிவிருத்தி அமைச்சு மற்றும் கல்வியமைச்சு ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி தலா ஒவ்வொரு உறுப்பினர்களையும் இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழக உறுப்பினர்களால் தெரிவு செய்யப்படும் 5 உறுப்பினர்களையும் இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழக ஆளுகைப் பேரவையின் அண்மித்த முந்திய தலைவரையும் உறுப்பினர்களாகக் கொண்டு அமைகின்றது.

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் நிருவாக முகாமைத்துவமானது ஆளுகைப் பேரவையினது பொறுப்பிலிருக்கும். இதற்கு மேலதிகமாக தகைமைப் பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் அதன் மேற்பார்வைப் பணிகள் ஆகியவற்றினையும் ஆளுகைப் பேரவையானது பொறுப்புடன் செயற்படுத்தும்.

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தினுடைய அங்கத்துவத்தினைப் பெறவிரும்பும் ஒருவர் குறித்துரைக்கப்பட்டுள்ள கல்விச் செயற்பாடு மற்றும் செயன்முறைப்பயிற்சி அனுபவம் என்பவற்றின் தேவைப்பாடுகளைத் திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதன் மூலம் அதனை அடைந்துகொள்ள முடியும். நிகழ்காலப் பரீட்சைக் கட்டமைப்பானது மட்டம் I, மட்டம் II, மற்றும் மட்டம் III என மூன்று மட்டங்களைக் கொண்டமையும்.



## நோக்கம்

நடுத்தர அளவிலான கணக்கியில் நிபூணர்களுக்கான மிகவும் அங்கிகரிக்கப்பட்ட தருதியாக இருக்க வேண்டும்.

## குறிக்கோள்

எங்கள் மாணவர்கள் தங்கள் பணியாளர்களுக்கு பெறுமதி சேர்க்கும் திறமையான நடுத்தர அளவிலான கணக்காளர்களாவதன் மூலம் வாழ்க்கையில் வெற்றிக்கு ஒரு வழியை வழங்குகிறார்கள். நாங்கள் எங்கள் உறுப்பினர்கள் வாழ்க்கை முன்னேற்றம் மற்றும் நெட்வொர்க்கிங் ஒரு வாய்ப்பை வழங்கும். எங்கள் ஊழியர்கள் மாணவர்களுடன் அதிகார தோரணையில் அல்லாமல் சுமூகமாக தொழிற்படுவதன் மூலம் மாணவர் திறன்களை ஊக்குவிக்கின்றன. மற்றும் துணை கல்வி நிறுவனங்களுடன் மிகவும் இணக்கமாக செயற்படுகின்றன. இதன் மூலம் சிறந்த நடுத்தர அளவிலான கணக்கியில் நிபூணர்களை உருவாக்கல்.

## ஆளுகைப் பேரவை 2026 - 2027
## Governing Council 2026 - 2027

| | |
|---|---|
| தலைவர் | - கலாநிதி. சாமர பண்டார<br>FMAAT, FCA, FCMA, PhD |
| உப – தலைவர் | - திரு. தயால் அபயசிங்க<br>FMAAT, FCPM, ACMA, APFA, MBA(Fin)(Col), HNDA, PQHRM, ACS, |
| செயலாளர் | - திரு. தேஜா டி சில்வா<br>FMAAT, ACA, MCMA |
| அண்மித்த முந்திய தலைவர் | - திரு. இந்திரக லியனகே<br>FMAAT, MBA, FIB(s), FCPM, FICM(UK), AICM, MCIS(UK), PCD(CASL), CSUD |

## ஏனைய அங்கத்தவர்கள்
## Other Council Members

| | |
|---|---|
| திரு. R எமில் சாமிந்த | - FMAAT, FCA, MBA Finance - Uni. of Col., BB Mgt (HR) Sp |
| திரு. நோமல் ஏகநாயக்க | - MAAT, FCA, MBA PCD (Procurement) |
| கலாநிதி. ரோஷன் ஜயந்த | - FMAAT, FCA, PhD |
| திரு. ஆர்.ஏ.கே. ஜீவந்த | - FMAAT, B Com(Sp), CBA (CASL), DTM (Toastmaster International) |
| திரு. W.G. இஸுரு கல்ஹார | - FMAAT, ACA, ACCA, FCMA, ACPM |
| திரு. P.D வசந்த குமார | - FMAAT, MA (Econ), (Uni. of Kel) B Com (Acc) Sp.(USJ), CBA (CASL), HNDA, CTP, AMOA(UK) |
| திரு. ரோஷாந்த முனசிங்க் | - FMAAT, FCA, FCMA, FTII, MBA, MFE |
| திரு. ஜயந்த பீரிஸ் | - FCA, B Com (Sp), MSc(Mgt) |
| திரு. K.L ஜகத் நந்தன பெரேரா | - FMAAT, FCA, B.B Mgt (Acc) Sp. |
| திரு. சுனில் வணிகபடு | - FMAAT, CPA, FCPM |
| செல்வி ஹசாரா பெர்னாண்டோட | - BCom (Special) Degree, Master of Arts (Econ), Licentiate Part II - CASL, CPFA, APFA |
| செல்வி A.S.D அலுத்கே | - FCA, B.B Mgt (Fin) Sp. M.Bus (Acc), CASL Strategic Level 1, AAT(SL) Passed Finalist |

## சிரேஷ்ட முகாமைத்துவம்
## Senior Management

| | |
|---|---|
| தலைமை செயல் அதிகாரி | – திரு. திஷங்க குமாரசிங்க<br>FMAAT, B.Com (Sp) Int'l Trade, PG. Dip. IPM-USJ, MSLIM |
| தலைமை கல்வி அதிகாரி | – திருமதி. நிமாலி ஏகநாயக்க<br>FMAAT, FCA, ACCA, MPAcc (USJ), B Sc (Mgt) (USJ), Dip. in Taxation |
| பிரதம நிதி கட்டுப்பாட்டாளரி | – திரு. முதித விஜேசுந்தர<br>B Sc. Acc. (USJ), ACA, ACCA, MBA (USQ)-Aus. |
| மாணவர் பதிவு மற்றும் உறுப்பினர் பிரிவு தலைவர் | – திருமதி. S. A. நடீ N. பெரேரா<br>MBA (Mgt) UK, B.Sc. Mgt (Sp) (USJ), MSLIM, CBA,<br>MCPM AIPFM |
| தேர்வுகள் பிரிவு தலைவர் | – திருமதி. டீ.சு. லிலானி தனுஜ<br>FMAAT, MBA (Sp) Finance (Cardiff - UK), FCA, FCMA. |
| வணிகப் பள்ளி தலைவர | – திரு. சச்சித் கருணாரத்ன<br>MBA (UOC), BBA (MKT) Sp (UOC), Dip. MACIM, MSLIM |
| மனித வள மற்றும் நிர்வாகப் பிரிவு தலைவர் | – திருமதி. சலூஜா ஹேரத்<br>MBA International - UK, BBA (HRM) Sp (UOC), ACIPM, LL. Dip |
| தலைமை அதிகாரி - AAT வணிகத்துறை பாடசாலை | – திருமதி. அஜனி D. பெர்னாண்டோ<br>MSc in Management (USJ), BSc. Accounting (Sp) (USJ), Dip. in IT, CIMA (UK), Passed Finalist. |
| தகவல் தொழில்நுட்ப அதிகாரி – | – திரு. லசந்த பெரேரா<br>MBCS, BSc (Hons) Data Science - London Metropolitan University (UK) |
| முகாமையாளர் – தேர்வுகள் பிரிவு | – திரு. ஹென்றி தலகலா |

# மாணவர் பதிவு மற்றும் வழிகாட்டல்




## பதிவுக்கான குறைந்த பட்ச தகுதி

க.பொ.த (சா/த) பரீட்சையில் எதாவது பாடங்களில் ஆறு சித்திகள் (இலங்கை)

**அல்லது**

க.பொ.த (சா/த இங்கிலாந்து) பரீட்சையில் ஏதாவது 5 பாடங்களில் சித்திகள்

**அல்லது**

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதாவது இரண்டு பாடங்களில் சித்திகள் (இலங்கை / இங்கிலாந்து)

**அல்லது**

அங்கீகரிக்கப்பட்ட தாபனமொன்றில் கணக்கு எழுதுவினைஞர் / கணக்காய்வு எழுதுவினைஞர் / கணக்குப்பதிவாளர் / கணக்குப்பயிலுனராக ஐந்து வருடகால அனுபவம்

**அல்லது**

AAT கழகத்தின் ஆளுகைப்பேரவையால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய வேறு ஏதாவது ஒத்த உயர் தகைமைகள்.

# மாணவர் பதிவு நடைமுறைகள்

இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் பரீட்சைகளுக்குத் தோற்றுவதற்காகத் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் சகல மாணவர்களும் விண்ணப்பத் தொகுதி ஒன்றினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

இலத்திரனியல் முறைமையடாக பதிவு செய்ய விரும்புவர்கள் **www.aatsl.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு செல்லவும்

**மாணவர் வழிகாட்டி ஒன்றினைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வழிமுறைகள்**

**பதிவுக்கான விண்ணப்பங்களை கையளித்தல்**



**விண்ணப்பத்தொகுதியினை எவ்வாறு பெற்றுக்கொள்வது?**

திங்கள் முதல் வெள்ளி வரை அலுவலக நேரம் 8.30 am - 4.45 pm சனிக்கிழமை 9.00 am - 4.00 pm வரை பெற்றுக்கொள்ள முடியும்.

1. AAT **இலங்கை தலைமையலுவலகத்தின் மாணவர் சேவைப்பிரிவில் கொள்வனவு செய்யலாம்.**

   **அலுவலக** நேரம் திங்கள் முதல் வெள்ளி வரை

   8.30 மு.ப. - 4.45 பி.ப. மற்றும் சனிக்கிடினமகளில்

   9.00 மு.ப. - 4.00 பி.ப.

2. உங்களுக்கு அருகிலுள்ள **AAT கிளையொள்றில் அல்லது கிளைகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய விபரங்களை அறிய மாணவர் கையேட்டின் இறுதி** பக்கத்தை வாசிக்கவும்

3. **அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிலையங்களிலிருந்து கொள்வனவு செய்யலாம்.**

**மாணவர் பதிவு**

**உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட மாணவர் பதிவிற்கான விண்ணப்பப்படிவம் இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகத்தின் அலுவலகத்தில் நேரடியாகக் கையளிக்க முடியும் அல்லது தலைமை அதிகாரி (பதிவு மற்றும் அங்கத்துவம்) கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

**பதிவிற்கான விண்ணப்பப்படிவத்தோடு கீழ்வருவன இணைக்கப்படல் வேண்டும்.**

a) பிறப்புச் சான்றிதழ்ளின் பிரதி.

b) தேசிய அடையாள அட்டையின் பிரதி (தேசிய அடையாள அட்டை இல்லாவிடின் தபால் அடையாள அட்டை அல்லது அடையாளத்தை உறுதி செய்யும் வேறு சட்ட ஆவணங்கள்.

c) கல்விச் சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி. (மேலதிக விபரங்களை பதிவிற்கான விண்ணப்பப்படிவத்தின் மறுபக்கத்தில் பார்க்கவும்.) பாடசாலை அதிபரினால் அல்லது உப அதிபரினால் நிரப்பப்படும் மூலப்பிரதிகளைப் பெறும்போது மாணவரினுடைய பெயர் அதிபரினுடைய/ உபஅதிபரினுடைய கையெப்பம் மற்றும் அவற்றுக்குப் பாவிக்கப்படும் இறப்பர் சீலில் அதிபரின் பெயர் இருப்பதை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.

d) **பதிவுக்கட்டணத்தினை** தேசிய சேமிப்பு வங்கி (NSB) மற்றும் ஹட்டன் நஷனல் வங்கி (HNB) இன் எந்தவொரு கிளையிலும் செலுத்த முடியும். பணம் செலுத்துவதற்கு வங்கியிலுள்ள வைப்புச் சீட்டினை பயன்படுத்த முடியும். பணம் செலுத்திய பின்னர் வைப்புசீட்டின் வாடிக்கையாளர் பிரதியினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பி வைத்தல் வேண்டும். (தயவுசெய்து விண்ணப்பப்படிவத்தி லுள்ள கட்டணம் செலுத்தும் விதி முறைகளை பின்பற்றவும்)

e) உங்கள் பெயரும் தேசிய அடையாள அட்டை இலக்கமும் புறப்பக்கத்தில் எழுதப்பட்ட கடவுச்சீட்டுக்கு உபயோகிக்கும் அளவிலான (3.5 செ.மீ x 4.5 செ.மீ) இரண்டு வர்ணப்புகைப்படங்கள். (ஒரு புகைப்படைத்தினை சிறிய கடிதஉறையினுள் வைத்து, புகைப்படம் சேத மற்ற வகையில் விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்பவும்)

f) சுய முகவரி எழுதப்பட்ட, ரூபா 60/= முத்திரையொட்டப்பட்ட இரண்டு கடித உறைகள் (9″ x 5″)

g) முத்திரை ஒட்டப்பட்ட சுயமுகவரி எழுதப்பட்ட விண்ணப்பப்படிவம் பெற்றதற்கான தபால் அட்டை வேண்டும்.

h) பதிவிற்காக விண்ணப்பித்த பின்னர் பதிவுக்கட்டணம் மீளழிக்கப்பட மாட்டாது.

**விசேட குறிப்பு**

க.பொ.த. சாதாரண தர பரீட்சையின் பின்னர் பெறுபேறுக்காக காத்திருக்கும் மாணவர்கள் நம் AAT மாணவர் பதிவுக்காக விண்ணப்பிக்க முடியும்.

அவர்கள் ஓரே தடவையில் ஏதாவது 06 பாடங்களில் சித்தியடைத்த பின்னர் AAT மாணவராக பதிவு செய்யப்படுவர்.

தற்பெழுது க.பொ.த. உயர்தாத்தில் கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களும் AAT மாணவர்களாக பதிவு செய்ய விண்ணப்பிக்க முடியும்

## மாணவர் பதிவுக்கான முடிவுத்திகதி

வருடம் முழுவதும் எக்காலப்பகுதியிலும் ஒருவர் மாணவராகப் பதிவுசெய்து கொள்ள விண்ணப்பிக்க முடியும். எனினும் குறிப்பிட்ட ஜுலை மற்றும் ஜனவரி பரீட்சைகளுக்குத் தோற்றுவதாயின் பின்வரும் முடிவுத்திகதிகள் நடைமுறையில் உபயோகிக்கப்படும்.

| | | |
|---|---|---|
| ஜுலை பரீட்சை | - | ஜனவரி 31 முன்பாக |
| ஜனவரி பரீட்சை | - | ஜுலை 31 முன்பாக |

**குறிப்பு** : சில வேளைகளில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள முடிவுத்திகதிகள் தவிர்க்கமுடியாத காரணங்களினால் மாற்றப்படலாம். இது தொடர்பில் தகவல்களை இ.க.தொ. கழகத்தினைத் தொடர்புகொண்டோ அல்லது AAT Srilanka இன் உத்தியோகபூர்வ முகப்புத்தக பக்கத்தின் (official Facebook page of AAT Sri Lanka) ஊடாகவோ அல்லது பத்திரிகைகள் வாயிலாகவோ இணையத் தளத்தினுடாகவோ அறிந்துகொள்ள முடியும்.

**மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் ஒவ்வொரு பரீட்சைக்குமான பதிவு செய்தல் முடிவுத்திகதிக்கு முன்னதாக இலங்கை க.தொ. கழக அலுவலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.**



## பதிவுக் கட்டணங்கள்
## (Registration Fees)

**பதிவுக் கட்டணங்கள்**

| | | |
|---|---|---|
| பதிவுக் கட்டணம் | - | **ரூபா** 4,500/- |
| பாடசாலை மாணவருக்கான விசேட கட்டணம் | - | **ரூபா** 4,000/- |

(19 வயதிற்கு குறைந்தவா்கள் மற்றும் தற்போது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மட்டும்)

**தாமத விண்ணப்பங்கள்**

தாமத விண்ணப்பங்கள் விண்ணப்ப முடிவுத்திகதி கடந்த பின்னர் ஆகக்கூடியதான ஏழு நாட்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படும் எனினும் கீழ்க்குறிப்பிடப்படும் வகையில் தாமதக் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **தாமதப் பதிவுக் கட்டணம்** | - | **ரூபா** 4,950/- |
| **பாடசாலை மாணவருக்கான தாமதக் கட்டணம்** | - | **ரூபா** 4,400/- |

---

**குறிப்பு**

(1) மாணவரொருவர் தம்மை மாணவராகப் பதிவு செய்து கொள்வதனால் மாத்திரம் இ.க.தொ.க. பரீட்சைகளுக்குத் தோற்ற முடியாது. பரீட்சைக்குத் தோற்றுவதாயின் பூர்த்தி செய்யப்பட்ட பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தை உரிய முடிவுத்திகதிகளுக்கு முன் அனுப்பிவைத்தல் வேண்டும். (விபரங்களுக்கு 15 ஆம் பக்கத்தினைப் பார்க்க)

(2) பதிவுகளின்போது விண்ணப்பதாரியின் பிறப்புச் சான்றிதழில் காணப்படும் பெயரே மாணவரின் பெயராக எடுத்துக்கொள்ளப்படும்.

### ஆரம்ப பதிவின் செல்லுபடிக்காலம்

ஆரம்ப பதிவானது பதிவு செய்த ஆண்டின் டிசம்பர் 30 ஆம் திகதி வரை செல்லுபடியாகும். நன்மை பதிவு செய்த திகதியை கருத்தில் கொள்ளாது நாட்காட்டி ஆண்டு முடிவுதிகதி வரை செல்லுபடியாகும்.

## மாணவர் அடையாள அட்டை
## Student Identity Card

விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் **மாணவர் அடையாள அட்டையொன்று மாணவருக்கு அனுப்பி வைக்கப்படும் மாணவர் அடையாள அட்டையினைப் பெற்றுக்கொண்டதும் மாணவர் தமது வழமையான கையொப்பத்தினை** அதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் இடுதல் வேண்டும்.

மாணவர் பதிவு அட்டையினைத் தொலைத்தாலோ / தவறவிட்டாலோ ரூபா 100/- இனைக் கட்டணமாகச் செலுத்தி மாணவர் **அடையாள அட்டையின் பிரதியொன்றினை** (Duplicate) பெற்றுக்கொள்ள முடியும். (கட்டணம் மாற்றத்திற்கு உட்பட்டது)

மாணவர்கள் தமது **முழுமையான கையொப்பத்தினையும் சுருக்கக்கையொப்பத்தினையும்** வேறாகும் வகையில் தெளிவாகப் பயன்படுத்த வேண்டுமெனப் பொதுவாக எதிர்பார்க்கப்படுகின்றது.




(AAT மாணவர் அடையாள அட்டை மாதிரி உருவம்)

## மாணவர் பதிவினைப் புதுப்பித்தல்
## Renewal of Student Registration

மாண்வரொருவர் தமது மாணவர் பதிவினை பதிவு செய்த ஆண்டின் பின்னர் அடுத்துவரும் ஒவ்வொரு ஆண்டுக்கும் உரிய புதுப்பித்தல் கட்டணத்தை (ஆண்டுதோறும்) செலுத்தி **AAT கற்கை நெறியின் அனைத்து மட்டங்களையும் பூர்த்தி செய்து AAT சித்தியடைந்த மாணவராகும் வரை (AAT Passed Finalist)** மாணவர்கள் தமது மாணவர் பதிவினை புதுப்பித்துக்கொள்ள வேண்டும். முன்னைய ஆண்டின் டிசம்பர் **30ம் திகதிக்கு முன்னர்** புதுப்பித்தற் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும். நடைமுறையிலுள்ள புதுப்பித்தல் கட்டணம் **ரூபா. 2,750/-.** உரிய திகதிக்குப் பின்னர் புதுப்பிக்கப்படும் பதிவுகளைப் பொறுத்தமட்டில் வழமையான கட்டணத்துடன் தாமதப் புதுப்பித்தற் கட்டணமாக ரூபா. 500/- சேர்க்கப்படல் வேண்டும்.
(மொத்தமாக ரூபா. **3,250/-**) (புதுப்பித்தல் கட்டணம் மாற்றத்திற்குட்படக் கூடியது)

- புதுப்பித்தலுக்கான அறிவித்தல் மாணவர்களுக்கு கார்த்திகை மாதத்தில் வழங்கப்படும். முடிவுத் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்துவதற்கு உரிய பணச் செலுத்துகைச் சிட்டைகளைப் பெற்று மாணவ அங்கத்துவத்தைப் புதுப்பிப்பது மாணவர்களின் கடைமையாகும்.
  இத்தகவல்கள் www.aatsl.lk இல் பெற்றுக்கொள்ள முடியும்.
- பதிவுசெய்த எந்தவொரு மாணவரும் தமது முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களில் மாற்றங்கள் ஏற்படுமாயின் அது குறித்து AAT Srilanka இன் மாணவர் பதிவு பிரிவிற்கு இலத்திரனியல் அஞ்சல் அல்லது கடிதம் மூலம் அறிவிக்க வேண்டும்.
- **புதுப்பித்தலினை உரியவகையில் மேற்கொள்ளாத மாணவர்களுக்கு பரீட்சை விண்ணப்பங்கள் உட்பட ஏனைய தகவல்கள் எதுவும் அனுப்பி வைக்கப்படமாட்டாது.**
- மாணவர் ஒருவர் குறித்த ஆண்டில் இடம்பெற்ற பரீட்சைக்கு சமூகமளிக்கத் தவறியிருப்பினும் தமது மாணவத்துவத்தை செயற்பாட்டில் வைத்திருக்கு புதுப்பித்தல் வேண்டும்.

# AAT பரீட்சைகளுக்கான விலக்களிப்புக்கள்
## Exemptions from AAT Examinations



சில சந்தர்ப்பங்களில் ஏ.ஏ.டி பரீட்சைக்கான பாடம் / பாடங்கள் பரீட்சைக்குத் தோற்றியோ அல்லது ஏ.ஏ.டி ஆளுகைப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்ட முன் வெளியக தகைமைகளுக்குரிய விலக்களிப்புக்களை பெற்றோ பூர்த்தியாக்கிக்கொள்ளமுடியும்.

(உதாரணமாக க.பொ.த. உயர்தர பெறுபேறுகள், பல்கலைக்கழக முதுமானிப்பட்டம் ஆகியன)

பாடங்களின் / மட்டங்களின் விலக்களிப்பானது முன்னைய தகைமையின் அடிப்படையில் AAT பரீட்சைக்குத் தோற்றாமல் அப்பாடத்தின் அல்லது மட்டத்தின் சித்தியினைக் குறித்து நிற்கும்.

இலங்கை AAT கழகத்தின் பரீட்சைகளை விலக்களிப்புக்களுடன் பூரணப்படுத்த விரும்பும் மாணவரொருவர் அதற்கான தகைமைகளிருப்பின் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விலக்களிப்பு விண்ணப்பப்படிவத்தினை பதிவிற்கான விண்ணப்பப்படிவத்துடன் அல்லது பதிவின் பின்னர் முடியுமானவரை விரைவில் சமர்ப்பித்தல் வேண்டும். பதிவுசெய்யப்பட்ட மற்றும் செயலிலுள்ள மாணவர்கள் மட்டும் விலக்களிப்புகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இருப்பினும் பதிவிற்கான விண்ணப்பத்தினை மேற்கொள்ளும்போது விலக்களிப்புக்களைப் பெற்றுத்தரக்கூடிய பெறுபேறுகளுக்காகக் காத்திருக்கும் மாணவர்கள் பதிவுசெய்ததன் பின்னர் விலக்களிப்புக்களுக்காக விண்ணப்பிக்க முடியும். எனினும் கீழ்வரும் முடிவுத் திகதிகள் நடைமுறையில் உபயோகிக்கப்படும். பதிவு செய்த பின்னர் வருட இறுதியில் விலக்களிப்புக்கு விண்ணப்பித்திருப்பின், விண்ணப்பிக்க முன்னர் மாணவத்துவம் செயலில் இருக்க வேண்டும்.

### விலக்களிப்புக்களுக்கான முடிவுத்திகதிகள்

ஜுலை பரீட்சை மார்ச் 31
ஜனவரி பரீட்சை செப்டெம்பர் 30

முடிவுத் திகதிகளின் பின் வழங்கப்பட்ட விலக்களிப்புக்களை ஒன்றிணைத்து பின்வருகின்ற விலக்களிப்புக்களுடனான முழுமையான பெறுபேற்றுத்தாளாக வழங்கப்படமாட்டாது என்பதனால் மேற்படி திகதிகளை கடைப்பிடிக்குமாறு உங்களுக்கு ஆலோசனை கூறப்படுகின்றது. விசேடமாக, நீங்கள் ஏதாவது AAT பரீட்சைகளுக்கு, அதே காலப்பகுதிகளில் விண்ணப்பித்திருப்பின், முடிவுத்திகதிகளின் பின்னரான விலக்களிப்பு விண்ணப்பங்கள் எங்களுடைய கணனி முறைமையில் உட்படுத்தப்படமாட்டாது.

ஒரு தடவை விலக்களிப்புக்கள் வழங்கப்பட்டால், அவை ஏதாவது சந்தர்ப்பங்களின் கீழ் இரத்துச்செய்யப்படமாட்டா. AAT Sri Lanka வின் பாடமொன்றை முடிப்பதற்கான உங்கள் தெரிவு ஒன்றில் பரீட்சையினால் அல்லது விலக்களிப்பினால் மட்டுமே இருக்க வேண்டும்.

வேறு தகைமைகள் (CA, ACCA போன்றவை) மூலம் விலக்களிப்புக்களைப் பெற்று AAT இனை பூர்த்தி செய்ய விரும்பின், 27ம் மற்றும் 28ம் பக்கத்தில் உள்ள விலக்களிப்புக்கள் தொடர்பான விசேட அறிவுறுத்தலை பின்பற்றுக.

வேண்டப்படும் விலக்களிப்புக்கள், AAT இறுதிப்பரீட்சைகளுக்கு (மட்டம் III) விண்ணப்பிக்க முன்னர் பெறப்படல் வேண்டும்.

விலக்களிப்பு தொடர்பான மேலதிக தகவல்களை வெற்றுக்கொள்ள www.aatsl.lk இலுள்ள FAQ களை படிக்கவும்.

**விலக்களிப்பு விண்ணப்பப்படிவம் மற்றும் கட்டணம் செலுத்தும் விதிமுறைகள் என் பனவற்றை AAT இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். கீழ்வரும் இணையத்தள பக்கத்தில் பதிவிறக்கம் செய்க கொள்ள முடியும்**

### விலக்களிப்புகளுக்காக விண்ணப்பித்தல்

விலக்களிப்புகளை பெற்றுக் கொள்ளும் முகமாக, மாணவர்கள் முறையாக பூரணப்படுத்திய விண்ணப்ப படிவத்துடன், **பணவைப்பு செய்யப்பட்ட பற்றுச்சீட்டின் மூலப்பிரதியையும்,** உறுதிசெய்யப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகளையும். விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னராக அனுப்பிவைக்க வேண்டும். விலக்களிப்பு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதும் விலக்களிப்பு சான்றிதழ் வழங்கப்படும்.

# புதிய பாடத்திட்டத்தின் கீழ் விலக்களிப்புகள்

(2020ம் ஆண்டு ஜுலை மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருகின்றது.)

பின்வரும் தகைமைகள் | நிறுவனங்கள் விலக்களிபபுக்களை வழங்குவதற்கு ஏற்றுக்கொளப்பட்டுள்ளது. இருப்பினும் அவற்றை குறித்த இலக்கங்களின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தகவல்களுடன் தொடர்புபடுத்தி வாசித்தல் வேண்டும்.

## (1) பாட விலக்களிப்புகள் – மட்டம் 1

**(A)** AAT இல் பதிவுசெய்யபபட்ட, **G.C.E. உயர் தர பரீட்சையில்** (இலங்கை/ UK) சித்தியடைந்த மாணவர்கள் பின்வரும் பாடங்களில் மட்டம் 1 பரீட்சையில் கீழ்காட்டப்பட்டவாறு விலக்களிப்பு பெற முடியும்.

| G.C.E உயர் தர பாடங்கள் | மட்டம் 1 இல் விலக்களிக்கப்படும் பாடம் |
|---|---|
| கணக்கீடு | 1902 நிதிக் கணக்கீடு (FAC) |
| இணைந்த கணிதம்/ தனி கணிதம்/பிரயோக கணிதம்/ வணிக புள்ளிவிபரவியல் | 1902 வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் (BMS) |
| பொருளியல் | 1603 பொருளியல் (ECN) |
| வணிகக் கல்வி / வர்த்தகமும் நிதியியலும் | 1604 வியாபாரச் சூழல் (BEN) |

**(B)** சர்வதேச கணக்குப்பதிவாளர் கழகத்தினுடைய **(IAB)** இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மட்டம் 1 இன் 1901 நிதிக் கணக்கீடு(FAC) இனை விலக்களிப்பு பெற முடியும்.

**(C)** வங்கியாளர் நிறுவனத்தினுடைய (SL/UK) வங்கி மற்றும் நிதியியல் பரீட்சைகளை **(CBF/IABF)** பூர்த்தி செய்த மாணவர்கள் பின்வரும் பாடங்களில் விலக்களிப்பு பெற முடியும்.

| IBSL பாடங்கள் | மட்டம் 1இல் விலக்களிக்கப்படும் பாடம் |
|---|---|
| வணிக கணக்கீடு | 1901 நிதிக் கணக்கீடு (FAC) |
| வணிக கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல் | 1902 வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் (BMS) |
| பொருளியல் கொள்கைகள் | 1603 பொருளியல் (ECN) |

## (2) மட்டம் I மற்றும் மட்டம் II இலிருந்து பாட விலக்களிப்புக்கள்

இலங்கை பல்கலைக்கழங்களின் ஆணைக்குழுவினால் அனுமதியளிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் முகாமைத்துவ பிரிவுடன் தொடர்புடைய முதுகலைமானிப் பட்டத்தை (MBA) பூரணப் படுத்திய மாணவர்கள் பின்வரும் பாடங்களில் விலக்களிப்புகளை பெறுவர்.

| மட்டம் I | | | மட்டம் II | |
|---|---|---|---|---|
| 1901 | நிதிக் கணக்கீடு | (FAC) | வணிக முகாமைத்துவம் | (BMA) |
| 1603 | பொருளியல் | (ECN) | | |
| 1604 | வணிகச் சூழல் | (BEN) | | |

## (3) பூரண விலக்களிப்பு – மட்டம் 1

வணிக முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவனத்தால் **(NIBM)** வழங்கப்படும் வணிக முகாமைத்துவத்திற்கான உயர் டிப்ளோமா. (ADBM).

## (4) மட்டம் 1 இலிருந்து பூரண விலக்களிப்பு மற்றும் இரண்டாம் மட்டத்தில் வியாபாரச் சட்டம் (BLA) பாடத்தில் விலக்களிப்பு

I. **இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின்** முகாமைத்துவ கற்கையில் டிப்ளோமா / உயர் டிப்ளோமா

II. அரச தொழில்நுட்ப கல்லூரி / உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் **HNDA / HNDC / HNDM** என்பவற்றில் முதலாம் மற்றும் இரண்டாம் வருட பரீட்சை

III. அரச தொழில்நுட்ப கல்லூரி / உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் **HNDBA** இல் பூரணத்துவம்.

Iv. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் **(UGC)** பரிந்துரைக்கப்பட்ட வேறு பல்கலைக்கழகங்களின் **முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் தவிர்ந்த ஏனைய பட்டங்கள்.**

## (5) மட்டம் 1 இலிருந்து பூரண விலக்களிப்பு மற்றும் இரண்டாம் மட்டத்திலநிதி மற்றும் செலவு கணக்கியல் பாடத்தில் விலக்களிப்பு (FCA)

I. பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர் கழகத்தினுடைய **(ACCA-UK)** அடிப்படைகள் (அறிவு மட்டம்)

## (6) மட்டம் 1 இலிருந்து பூரண விலக்களிப்பு மற்றும் வணிக முகாமைத்துவம் (FCM) வணிகச் சட்டம் ( BLA) என்பவற்றுக்கான விலக்களிப்பு.

வணிக முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவனத்தால் (NIBM) வழங்கப்படும் வணிக முகாமைத்துவத்திற்கான உயர் தேசிய டிப்ளோமா **(HNDBM)**.

**(7)** **மட்டம் 1 இலிருந்து பூரண விலக்களிப்பு மற்றும் இரண்டாம் மட்டத்தில் வியாபாரச் சட்டம் (BLA) மற்றும் டிஜிடல் மாற்றம் மற்றும் தகவல் முறைமை இரு பாடங்களிலும் விலக்களிப்பு (DTI)**

I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் **முகாமைத்துவம் மற்றும் வர்த்தகம் சார்ந்த பட்டங்களில்** முதலாம் மற்றும் இரண்டாம் வருட பரீட்சைகள்.



**(8)** **மட்டம் 1 இலிருந்து பூரண விலக்களிப்பு மற்றும் இரண்டாம் மட்டத்தில் வியாபாரச் சட்டம் (BLA) மற்றும் நிதி மாற்றம் செலவு கணக்கியல் (FCA)**
**இரு பாடங்களிலும் விலக்களிப்பு**

I. பட்டய முகாமைத்துவக் கணக்காளர் நிறுவனத்தின் சான்றிதழ் மட்டம் **(CIMA-UK)**
II. இலங்கை உறுதிப்படுத்தப்பட்ட நிர்வாக கணக்காளர் நிறுவனத்தின் அடிப்படை மட்டம் - CMA இலங்கை (CMA-SL)

**(9)** **மட்டம் 1 இலிருந்து பூரண விலக்களிப்பு மற்றும் இரண்டாம் மட்டத்தில் நிதி மாற்றம் செலவு கணக்கியல் கணக்கீடும் கிரயவியலும் மற்றும் வியாபார முகாமைத்துவம் பாடங்களிலும் விலக்களிப்பு (FCA)**

I. தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் கீழ் தொழில்நுட்ப கல்லூரியினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் (NCAT)

**(10)** **மட்டம் 1 இலிருந்து பூரண விலக்களிப்பு மற்றும் இரண்டாம் மட்டத்தில் நிதி மாற்றம் செலவு தவிர்ந்த அனைத்து பாடங்களிலும் விலக்களிப்பு (FCA)**

I. அரச தொழில்நுட்ப கல்லூரி / உயர் தொழில்நுட்ப நிறுவனத்தினால் நடாத்தப்படும் **HNDC / HNDM** என்பவற்றில் இறுதிப்பரீட்சையை பூர்த்தி செய்தவர்.

**(11)** **மட்டம் 1 இலிருந்து பூரண விலக்களிப்பு மற்றும் இரண்டாம் மட்டத்தில் டிஜிடல் மாற்றம் மற்றும் தகவல் முறைமை தவிர்ந்த அனைத்து பாடங்களிலும் விலக்களிப்பு (DTI)**

I. இலங்கை தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் வணிக நிதியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDBF);.

**(12)** **மட்டம் 1 மற்றும் 11 இலிருந்து பூரண விலக்களிப்பு**

I. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட பல்கலைக்கழகங்களின் **பட்டங்களுடன்** பின்வருவனவற்றில் சித்தி
   (a) கணக்கீடு (b) வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும்
   (c) தகவல் முகாமைத்துவம் மற்றும் பிரயோகம் (d) வணிகச் சட்டம் (e) பொருளியியல்.
II. பட்டய முகாமைக்கணக்காளர் நிறுவனத்தின் (CIMA-UK) செயற்பாட்டு மட்டம்
III. **HNDA** இல் மூன்றாம் வருட பரீட்சை (முதலாம் மற்றும் இரண்டாம் வருடம் முழுமையாக பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்
IV. தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தின் கீழ் தொழில்நுட்ப கல்லூரியினால் நடாத்தப்படும் கணக்கீட்டில் தேசிய டிப்ளோமா. **(NDA)**
V. அனைத்து தேசியப் பல்கலைக்கழகங்களிலும் கணக்கியல் சிறப்புப் பட்டப்படிப்புகளில் சேர்ந்துள்ள மூன்றாம் ஆண்டு மாணவர்கள் பங்குபெற்ற முடியும்

**(13)** **மட்டம் 1 மற்றும் இரண்டாம் மட்டத்திலிருந்து பூரண விலக்களிப்பு மற்றும் மூன்றாம் மட்டத்தில் முகாமைக் கணக்கீடும் நிதியியலும் (MAF) பாடத்தில் விலக்களிப்பு**

I. இலங்கை உறுதிப்படுத்தப்பட்ட நிர்வாக கணக்காளர் நிறுவனத்தின் செயற்பாட்டு மட்டம்- CMA இலங்கை (CMA-SL)

**(14)** **இலங்கை பட்டய கணக்காளர் பரீட்சை CA / பரீட்சை மட்டங்களுக்கான விலக்களிப்புகள்**

(A) **இலங்கை பட்டயக் கணக்காளர்களுக்கான** வணிக மட்டம் I மற்றும் II பரீட்சைகளில் (2020-2025) ஒவ்வொரு பாடங்களிலும் சித்தியடைந்த மாணவர்களுக்கான விலக்களிப்பு திட்டம் பின்வருமாறு.

| இலங்கை பட்டயக் கணக்காளர்களுக்கான வணிக மட்ட பரீட்சைகளில் சித்தியடைந்த பாடங்கள் | AAT இலங்கை பரீட்சைகளின் கீழ் விலக்களிக்கப்படும் பாடங்கள் |
|---|---|
| வணிக மட்டம் **I** | |
| நிதியியல் கணக்கீடு | 1901 நிதிக் கணக்கீடு (FAC)<br>2801 நிதி மற்றும் செலவு கணக்கியல் (FCA) |
| நிதியியல் கணிதம் மற்றும் புள்ளிவிபரவியல் | 1902 வணிகத்திற்கான கணிதம் மற்றும் புள்ளி (BMS) |
| வணிகச் சட்டம் | 2803 வணிகச் சட்டம் (BLA) |
| வணிகச் சூழல் மற்றும் பொருளியல் | 1603 பொருளியல் (ECN)<br>1604 வணிக சூழல் (BEN)<br>2804 வணிக முகாமைத்துவம் (BMA) |

STUDENTS' GUIDE

| இலங்கை பட்டயக் கணக்காளர்களுக்கான வணிக மட்ட பரீட்சைகளில் சித்தியடைந்த பாடங்கள் | AAT இலங்கை பரீட்சைகளின் கீழ் விலக்களிக்கப்படும் பாடங்கள் |
|---|---|
| வணிக மட்டம் II | |
| கணக்காய்வு வணிகச் செயற்பாடுகள் மற்றும் டிஜிற்றல் மயமாக்கல் | 3803 இடர் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வும் (FCA) |
| முகாமைக் கணக்கீடு | 2804 முகாமைக் கணக்கீடும் நிதியியலும் (MAF) |
| டிஜிற்றல் வணிக தந்துரோபாயம் | 2802 டிஜிடல் மாற்றம் மற்றும் தகவல் முறைமை (ISD) |
| வணிகத் தொடர்பாடல் | 305 வணிகத் தொடர்பாடல் (BC) |

(B) வணிக மட்டம் I உடன் திறன் பாடங்களையும் (Skill Pillar) பூரணமாக நிறைவுசெய்த மாணவர்கள் AAT இலங்கையினுடைய இறுதிப் பரீட்சையினை பூர்த்தி செய்தவராக வருவதற்கு பின்வரும் பாடங்களை பூர்த்தி செய்ய வேண்டும்

i. 2802 டிஜிடல் மாற்றம் மற்றும் தகவல் முறைமை (DIS)
ii. 3801 நிதி அறிக்கையிடல் (FAR)
iii. 3802 முகாமைக் கணக்கீடும் நிதியியலும் (MAF)
iv. 3803 இடர் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வும (FCA)
v. 3804 கூட்டுநிறுவன மற்றும் தனிநபர் வரியியல் (CPT)

(C) வணிக மட்டம் I மற்றும் II உடன் திறன் பாடங்களையும் (Skill Pillar) பூரணமாக நிறைவுசெய்த மாணவர்கள் AAT இலங்கையினுடைய இறுதிப் பரீட்சையினை பூர்த்தி செய்தவராக வருவதற்கு பின்வரும் பாடங்களை பூர்த்தி செய்ய வேண்டும்

i. 9801 நிதி அறிக்கையிடல் (FAR)
ii. 3804 கூட்டுநிறுவன மற்றும் தனிநபர் வரியியல் (CPT)

(D) நிர்வாக மட்டம் I மற்றும் II பரீட்சை (2015-2020) அறிவு நிரலிலுள்ள ஒவ்வொரு பாடங்களையும் பூர்த்தி செய்த மாணவர்கள் பின்வரும் பாடங்களில் விலக்களிப்பு பெற முடியும்.

| இலங்கை பட்டயக் கணக்காளர்களுக்கான நிர்வாக மட்ட பரீட்சைகளில் சித்தியடைந்த பாடங்கள் | AAT இலங்கை பரீட்சைகளின் கீழ் விலக்களிக்கப்படும் பாடங்கள் |
|---|---|
| KE 1 நிதிக் கணக்கீடு மற்றும் அறிக்கையிடலுக்கான அடிப்படைகள் | 1901 நிதி மற்றும் செலவு கணக்கியல (FAC)<br>2801 உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் (AFC) |
| KE 2 முகாமைக் கணக்கீட்டு தகவல்கள் | 1902 வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் (BMS)<br>3802 முகாமைக் கணக்கீடும் நிதியியலும் (MAF) |
| KE 3 சட்டத்திற்கான அடிப்படைகள் | 2803 வணிக சட்டம் (BLA) |
| KE 4 செயற்பாடுகள், உறுதிப்படுத்தல் மற்றும் விழுமியங்கள் | 2803 இடர் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வும் (FCA) |
| KE 5 முகாமைத்துவத்திற்கான வணிக நுண்ணறிவு | 1603 பொருளியல் (ECN)<br>1604 வியாபாரச் சூழல் (BEN)<br>2804 வியாபார முகாமைத்துவம் (BMA) |

(E) இலங்கை பட்டயக் கணக்காளர்களுக்கான அறிவு நிரலிலுள்ள நிர்வாக மட்டம் I மற்றும் II பரீட்சைகளை (2015-2020) பூரணமாக நிறைவுசெய்த மாணவர்கள் AAT இலங்கையினுடைய இறுதிப் பரீட்சையினை பூர்த்தி செய்தவராக வருவதற்கு பின்வரும் பாடங்களை பூர்த்தி செய்ய வேண்டும்

i. 2802 டிஜிடல் மாற்றம் மற்றும் தகவல் முறைமை (DIS)
ii. 3801 நிதி அறிக்கையிடல் (FAR)
iii. 3804 கூட்டுநிறுவன மற்றும் தனிநபர் வரியியல் (CPT)
iv. 305 வணிகத் தொடர்பாடல் (BC)

(F) இலங்கை பட்டயக் கணக்காளர்களுக்கான நிர்வாக மட்டம் I மற்றும் II பரீட்சைகளுடன் (2015-2020) அறிவு (Knowledge Pillor) மற்றும் திறன் பாடங்களையும் (Skill Pillar) பூரணமாக நிறைவுசெய்த மாணவர்கள் AAT இலங்கையினுடைய இறுதிப் பரீட்சையினை பூர்த்தி செய்தவராக வருவதற்கு பின்வரும் இரு பாடங்களையும் பூர்த்தி செய்ய வேண்டும்

i. 3801 நிதி அறிக்கையிடல் (FAR)
ii. 3804 கூட்டுநிறுவன மற்றும் தனிநபர் வரியியல் (CPT)

**குறிப்பு 1**
ஏனைய தகைமைகள் *AAT* இலங்கையினுடைய ஆளுகைக் குழுவினால் தனித் தனியாக தீர்மானம் செய்யப்படும்

**குறிப்பு 2**
விலக்களிப்புகளை வழங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட வரையறைகள் நடைமுறையிலுள்ள பாடத்திட்டத்தின் கீழ் மீளாய்வு செய்யப்படவில்லை, அவ்வாறான நிலைகளில் குறிப்பிட்ட அந்த காலப்பகுதியில் நடைமுறையிலிருந்த வரையறைகளுக்கு பொருத்தமான விலக்களிப்புகள் வழங்கப்படும்

# மாணவர்களுக்கான முக்கியமான அறிவுறுத்தல்கள்

- கழகத்துடனான சகல கடிதத்தொடர்பிலும், **மாணவர் பதிவு இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும்.** சகல பதிவு செய்யப்பட்ட மாணவர்களும் **மாணவர் அடையாள அட்டையை** தம்வசம் வைத்திருப்பது கட்டாயமானது என்பதுடன், கழகத்திற்கு நீங்கள் வருகை தரும்போதும், பரீட்சைக்குத் தோற்றும்போதும் அது **கொண்டுவரப்பட வேண்டும்.**
- விலாசத்தின் மாற்றத்தை அல்லது ஏதாவது தனிப்பட்ட தகவலின் மாற்றத்தைப்பற்றி பொருத்தமான போதெல்லாம் மாணவர் அடையாள அட்டையுடன் சேர்த்து **எழுத்து மூலம் அல்லது இலத்திரனியல் அஞ்சல் மூலம் கழகத்தின் பதிவுப் பிரிவுக்கு பதிவுசெய்யப்பட்ட மாணவர் ஒருவர் அறிவிக்க வேண்டும்.**
- **குறுஞ்செய்தி** மற்றும் **மின்ன....சல்** மூலமாக **தொடர்ச்சியான தொடர்பாடலை** மேற்கொள்வதற்கு, **மாணவர்கள் தமது தற்போதய தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரியை எம்முடன் பகிர்ந்துகொள்க.**
- சகல பதிவு செய்யப்பட்ட மாணவர்களும், வழமையாக அடுத்து வருகின்ற வருடத்திற்கான **ஒவ்வொரு வருடத்தின் டிசம்பர் 30 ஆம் திகதிக்கு முன்** தமது மாணவர் நிலையை (அவர்கள் AAT இறுதிப்பரீட்சையை முடிக்கும் வரை) புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் அவருடைய மாணவர் கணக்கினை AAT உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மாணவர் பதிவுத்தளத்தில் நிர்வகிக்க முடியும். மாணவர் பதிவு விண்ணப்ப பத்திரத்தில் தமது இலத்திரனியல் அஞ்சல் முகவரியை தவறாமல் வழங்குமாறு மாணவர்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.
- AAT தொடர்பான புதிய தகவல்களை பெற AAT Sri Lanka உத்தியோகபூர்வ இணையத்தளம் (www.aatsl.lk) மற்றும் AAT Sri Lanka உத்தியோகபூர்வ முகப்புத்தக பக்கத்தினையும் (official Facebook page of AAT Sri Lanka) அடிக்கடி பார்வையிடுமாறு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
- ஏதாவது சூழ்நிலைகளின் கீழ் பதிவுக்கட்டணங்களை/ விலக்களிப்புக்கட்டணங்களை கழகத்தினால் **மீளளிக்கமாட்டாது** அல்லது அத்தகைய கட்டணங்களின் **கைமாற்றத்தை அனுமதிக்கமாட்டாது.**
- பதிவுகட்டணத்தை செலுத்தும்போது "11" என்ற எழுத்துடன் தொடங்கும் விண்ணப்ப இலக்கம் **பணவைப்புத்துண்டில்** தெளிவாக எழுதப்பட வேண்டும். விலக்களிப்புக்கான கட்டணத்தை செலுத்தும்போது அல்லது இலத்திரனியல் பணசெலுத்துகையின்போது "33" என்ற எழுத்துடன் தொடங்கும் விண்ணப்ப இலக்கம் பணவைப்புத்துண்டில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.புதுபித்தலுக்கு இலக்கம் "44" என்று விண்ணப்ப இலக்கத்துக்கு மூன் குறிப்பிடல் வேண்டும்.
- பதிவுக்கும் / விலக்களிப்புக்கும் / புதுப்பித்தலுக்கும் விண்ணப்பிப்பதற்கான **முடிவுத் திகதிகள்** சகல மாணவர்களினாலும் பின்பற்றப்பட வேண்டும். நேரத்திற்கு நேரம் கட்டண அமைப்பின் மீளாய்வுடனும், வேறு பயனுள்ள தகவலுடனும் தம்மைப் **புதுப்பித்துக்கொள்ளுமாறு** மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
- AAT க்குரிய சகல ஆவணங்களும் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

## AAT சமூக வலைத்தளங்கள் மூலமாக எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்

AAT இன் நிகழ்வுகள், பரிட்சைகள், தகவல்கள், போட்டிகள் மற்றும் ஏனைய விபரங்கள் தொடர்பில் அறிந்து கொள்ள Digital யின் சமூக வலைதளங்களில் இணைந்து கொள்ள உங்களை அழைக்கின்றோம்

**Scan below QR code & Like / Follow**

www.aatsl.lk

# AAT இன் கழக அங்கத்துவம்






## அங்கத்துவத்தின் நன்மைகள் சில..

### வாய்ப்புக்கள்

- AAT அங்கத்துவத்தின் மூலம் IPA (Australia) மற்றும் IFA (UK) என்பவற்றை நேரடியாகப் பெற்றுக்கொள்ள முடியும்
- அங்கத்தவரின் பெயருக்கு பின்னால் “MAAT” இனை பதவிப் பெயராக பயன்படுத்த முடியும்.
- BMICH இல் இல் பட்டமளிப்பு விழாபட்டமளிப்பு விழா நடைபெறும்நடைபெறும் வாய்ப்புவாய்ப்பு உள்உள்ளதுளது
- பல்வேறு வலையமைப்பினூடான அறிவினைப் பெருக்குவதற்கான மற்றும் திறன் விருத்திக்கான கருத்தரங்குகள் மாநாடு என்பவற்றில் சிறப்பு விலையில் அல்லது இலவசமாக பங்குபற்ற முடியும்.
- சிறப்பு கழிவுகளையும் நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலதிக தகவல்களுக்கு www.aatsl.lk என்ற இணையத்தளத்திற்கு செல்லவும்**

# AAT இலங்கை பரீட்சைகள்

STUDENTS' GUIDE

## பரீட்சைகளை நடாத்துதல் மற்றும் பரீட்சை நிலையங்கள்

- AAT பரீட்சைகள் சாதாரண சூழ்நிலையின் கீழ் வருடாந்தம் இருமுறை இடம்பெறும்.

  1. ஜனவரி 2. ஜீலை

  அரசு பரீட்சைகளில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக இவை மாதங்களாக மாறலாம்.

- பரீட்சைகள் பிரதான மூன்று மொழிகளில் நடாத்தப்படும்.

  1. சிங்களம் 2. தமிழ் 3. ஆங்கிலம்

## பரீட்சை நிலையங்கள் அமைந்துள்ள பிரதான நகரங்கள்

| | | |
|---|---|---|
| - கொழும்பு | - பதுளை | - கண்டி |
| - அனுராதபுரம் | - மாத்தறை | - பொலன்நறுவை |
| - குருநாகல் | - காலி | - கழுத்தறை |
| - அம்பாறை | - கம்பகா | - மட்டக்களப்பு |
| - இரத்தினபுரி | - யாழ்ப்பாணம் | |

(பரீட்சார்த்திகள் அவர்களது விருப்பத்திற்கமைய மேற்குறிப்பிட்டவற்றுள் ஒன்றை பரீட்சை நிலையமாக தேர்ந்தெடுக்க முடியும்)

### முக்கியமானவை :

- எவ்வித காரணத்திற்காகவும் மொழிமூலம் மற்றும் பரீட்சை நிலையத்தினை மாற்றும் செய்ய முடியாது.
- விசேட நிகழ்வுகளின் காரணமாக பரீட்சை மாதம் மற்றும் திகதிகளை மாற்றும் இறுதி அதிகாரத்தினை ஆளுகைக் குழு கொண்டுள்ளது.

## பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

- பரீட்சை நடைபெறும் வருடத்தில் புதிதாக பதிவு செய்யப்பட்ட மாணவர்கள்.
- பரீட்சை நடைபெறும் வருடத்திற்கான மாணவத்துவத்தை புதுப்பித்திருந்த மாணவர்கள்.

## பரீட்சை விண்ணப்பங்களை பெற்றுக்கொள்வதற்கான முறைகள்

- மேற்குறிப்பிட்ட தகைமைகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்கு பரீட்சை விண்ணப்ப படிவம் மற்றும் கொடுப்பனவு சீட்டு என்பன பதிவு செய்யப்பட்ட முகவரிக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.
- தபால் மூலம் விண்ணப்ப படிவம் கிடைக்கப்பெறாத மாணவர்கள் AAT தலைமையகம் அல்லது அருகிலுள்ள கிளையினை தொடர்புகொள்வதன் மூலம் விண்ணப்ப இறுதி திகதிக்கு முன்னர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விண்ணப்ப படிவத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

## பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்தல்.

- BOC இன் வழியாகவும் கட்டணத்தை செலுத்த முடியும். AAT இலங்கை வழங்கிய பரீட்சை நுழைவு படிவத்தில் சேர்க்கப்பட்டுள்ள பற்றுசீட்டுக்களை பயன்படுத்தி நீங்கள் தேர்வு கட்டணத்தை செலுத்தி சரியான முறையில் தரப்பட்ட விண்ணப்பத்துடன AAT தலைமை அலுவலகத்திற்கு தபால் மூலம் அனுப்பலாம். அல்லது அறிவியல் உள்ள யுயுவு கிளையில் ஒப்படைக்கலாம

- நிகழ்நிலை விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் www.aatsl.lk என்ற இணையத்தளம் மூலம் நிகழ்நிலையூடாக AAT பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். நிகழ்நிலையூடான விண்ணப்பங்களை பூரணப்படுத்தல் மற்றும் சமர்ப்பிக்க முன்பாக பரீட்சை இணைய முகப்பில் உள்ள "பரீட்சைக்கு விண்ணப்பித்தல்" மற்றும் "எவ்வாறு பதிவு செய்தல்" என்பவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள விடையங்களை தயவுசெய்து தெளிவாக வாசிக்கவும். பின்னர் பின்வருவனவற்றில் கவனம் செலுத்தவும்.

  1. ஒன்லைன் 2. ஆ.ஃ.ப்லைன்

v **ஒன்லைன்** - இந்த முறையூடாக பரீட்சைக்கட்டணத்தை செலுத்தும் போது நீங்கள் உங்களது வரவட்டை அல்லது கடனட்டையினை பயன்படுத்த முடியும்.

v **ஆஃப்லைன்** - இந்த முறையூடாக பரீட்சைக்கட்டணத்தை செலுத்தும் போது விண்ணப்பப் படிவத்திலுள்ள கட்டணச் சிட்டையினை பயன்படுத்தி அல்லது இலங்கை வங்கியிலுள்ள வைப்புச்சீட்டினை பயன்படுத்தி கட்டணம் செலுத்த முடியும். அவ்வைப்புச்சீட்டின் புகைப்படத்தினை விண்ணப்ப படிவத்துடன் இணைக்க வேண்டும்.

### முக்கியமானவை.

- நீங்கள் ஏற்கனவெ AAT இலங்கை பரீட்சைகளுக்கு **ஒன்லைன் மூலமாக** விண்ணப்பித்திருப்பின், நீங்கள் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவத்தை தபால் மூலமாகவோ நேரடியாகவோ கையளிக்கவேண்டிய அவசியமில்லை.
- நீங்கள் கட்டணம் செலுத்தாது AAT இலங்கை பரீட்சைகளுக்கு **ஒன்லைன மூலமாக** விண்ணப்பத்தை பூரணப்படுத்தியிருப்பின் உங்களது விண்ணப்பங்கள் பூரணமற்ற விண்ணப்பங்களாகவே கருதப்படும் மற்றும் நீங்கள் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கவில்லை எனக் கருதுக.
- ஒருதடவை நீங்கள் AAT இலங்கை பரீட்சை இணைய முகப்பில் மாணவர் கணக்கினை உருவாக்கவுதன் மூலம் பதிவுசெய்திருப்பின் நீங்கள் எதிர்கால பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கும் இதனை பயன்படுத்த முடியும்.
- காசு வைப்புகள் காசு வைப்பு இயந்திரங்கள் மற்றும் ஈசி கேஸ் போன்றவற்றின் மூலம் செய்யப்படும் பரீட்சை கட்டணங்கள் சரியான பரிட்சை கட்டண முறையாக கருதப்படாது எனவே உங்கள் பரீட்சை கட்டிடங்களை BOCகவுண்டர் மூலம் மட்டும் செலுத்துங்கள்

## பரீட்சை விண்ணப்பங்களை AAT இலங்கைக்கு சமர்ப்பித்தல்.

- **பதிவுத்தபால் மூலம் அனுப்புதல்**

  பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்ப படிவம் மற்றும் கொடுப்பனவு வைப்புச் சீட்டினை விண்ணப்ப படிவத்துடன் அனுப்பப்பட்ட உறையினுள் இட்டு இலங்கைக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

- **பரீட்சை அனுமதிப்பத்திரத்தினை கையளித்தல்**

  பூரணப்படுத்தப்பட்ட பரீட்சை அனுமதிப் படிவத்தை பரீட்சைக்கட்டண கொடுப்பனவுச் சிட்டையுடன் இணைத்து விண்ணப்ப படிவத்துடன் அனுப்பப்பட்ட உறையினுள் இட்டு AAT இலங்கையின் தலைமையலுவலகம் அல்லது ஏதாவது கிளையில் கையளிக்க வேண்டும்.

### AAT பரீட்சையில் அமர்வதற்கு வேண்டப்படும் பாடங்களின் சித்தி பரீட்சை அனுமதி அட்டை

- AAT இலங்கையின் பரீட்சை பிரிவினால் அனுமதி அட்டைகள், நேர அட்டவணை, மற்றும் அறிவுறுத்தல்கள் அனைத்து தகைமையுடைய பரீட்சார்திகளுக்கும் பரீட்சை தினத்திலிருந்து இரு வாரங்களுக்கு முன்பாக தபாலிடப்படும்.
- மேலும், நீங்கள் AAT இணையத்தளத்தில் பரீட்சை இணைய முகப்பில் உருவாக்கப்பட்ட மாணவர் கணக்கனுாடாக குறிப்பிட்ட காலப்பகுதியினுள் பரீட்சை அனுமதி அட்டையி னk; mwpTWj;jt;jhspidk; பதிவிறக்கம் செய்ய முடியும். நீங்கள் ஏற்கனவே பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பொழுது மாணவர் கணக்கினை உருவாக்கியிருப்பின் அதன் மூலம் நேரடியாக தரவிறக்கம் செய்ய முடியும்.
- மேற்குறிப்பிட்ட முறைகளில் ஒன்றினுாடாக பரீட்சார்த்தி ஒருவர் அனுமதி அட்டையினை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பின், AAT தலைமையலுவலகம் அல்லது ஏதாவதொரு கிளையினை தொடர்புகொண்டு அனுமதியட்டை பிரதியொன்றினை பெற்றுக்கொள்ள முடியும்.

### பரீட்சைகளுக்கு சமூகமளித்தல்.

- பரீட்சை அனுமதி அட்டையினை பெற்றுக்கொண்ட பின்னர், AAT இலங்கையினால் அதிகாரமளிக்கப்பட்ட தனிநபர்களால் உங்களுடைய கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டு பரீட்சை முதல் நாள் பரீட்சை நிலையத்திற்கு அனுமதி அட்டையினை கொண்டு வரப்பட வேண்டும்.
- நீங்கள் பரீட்சை ஆரம்பிப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை நிலையத்திற்கு சமூகமளித்தல் வேண்டும்.
- மட்டம் 11 மற்றும் மட்டம் 111 இற்கு தோற்றும் மாணவர்களுக்கு 3 மணித்தியாலங்களுக்கு மேலதிகமாக 15 நிமிடங்கள் மேலதிக நேரமாக வினாக்களை வாசித்து விளங்குவதற்கு வழங்கங்கப்படும்.

### பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பதற்கான சிறப்பு விதிகள்

- நீங்கள் உயர்தரப்பரீட்சையினை அல்லது வேறு பரீட்சைகளை அடிப்படையாகக் கொண்டு விலக்களிப்புக்களை பெற தகுதியுடையவராயின், நீங்கள் பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்க முன்னர் விலக்களிப்புக்கான கொடுப்பனவுகளை செலுத்தி பூரணப்படுத்தப்பட்ட விலக்களிப்பு விண்ணப்ப படிவத்தினை மாணவர் பதிவுப் பிரிவிற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- மட்டம் 1 மற்றும் மட்டம் 11 இலுள்ள அனைத்து பாடங்களுக்கும் ஒன்றாக விண்ணப்பிக்க முடியும். இல்லையெனில் உங்களது தெரிவிற்கமைய பாடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.
- மட்டம் 111 இற்கு விண்ணப்பிக்கும் பொழுது, மட்டம் 1 மற்றும் மட்டம் 11 இற்கான விலக்களிப்புக்களை பூரணப்படுத்தி இருக்க வேண்டும்.
- மட்டம் 111 இற்கு விண்ணப்பிக்கும் பொழுது, உங்களது விருப்பத்திற்கமைய பாடங்களை தெரிவு செய்ய முடியாது. மட்டம் 111 இலுள்ள அனைத்து பாடங்களுக்கும் ஒன்றாக விண்ணப்பத்தல் கட்டாயமானது.
- மட்டம் 1 இனை பூரணப்படுத்திய அல்லது விலக்களிப்பு பெற்ற மாணவர்கள் திறன் மட்டத்திலுள்ள வணிகத் தொடர்பாடல் பாடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்.

- பாடத்தில் சித்தி பெற 50 புள்ளிகளை பெற வேண்டும்.
- குறித்த மட்டத்தில் தோல்வியுற்றிருப்பினும், “C தரம்” அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்ற பாடங்கள் தொடர்ந்தும் சித்தியடைந்ததாக கருதப்படுவதுடன் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டியதில்லை.
- சித்தியடைந்த அல்லது விலக்களிக்கப்பட்ட பாடங்களுக்கு மீண்டும் விண்ணப்பிக்க முடியாது.
- மட்டம் 111 இலுள்ள அனைத்து பாடங்களுடன் வணிகத் தொடர்பாடல் பாடத்தினையும் பூரணப்படுத்திய பின்னர் நீங்கள் இறுதிநிலை சித்தியடைந்தோராகக் கருதப்படுவீர்.

### பெறுபேறுகளின் வெளியீடு

- பரீட்சை நடைபெற்ற திகதியிலிருந்து 50 நாட்களுக்குள் பெறுபேறுகள் வெளியிடப்படும்.
- AAT இணையத்தளத்தினுாடாக பெறுபேறுகளை பார்வையிட முடியும்.
- பரீட்சார்த்திகள் பெறுபேற்று தாளினை தபால் மூலம் பெற்றுக்கொள்வார்கள்

### மோசடியான செயல்

- மாணவர்கள் பரீட்சைக்கு விடையளிக்கும் போது கையடக்க தொலைபேசியினை வைத்திருத்தல், ஸ்மார்ட் கடிகாரம் அல்லது சிறுகுறிப்புக்களை வைத்திருத்தல் மற்றும் ஏனைய பரீட்சை நடைமுறைகளுக்கெதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டால் பரீட்சார்த்தியின் பெறுபேறுகள் மற்றும் மாணவத்துவம் நீக்கம் செய்யப்படும்.

### சித்தியடைந்த / தோல்வியடைந்த பெறுபேறுகள்.

- யுயுவ பரீட்சைகளின் எந்தவொரு பாடத்திலும் சித்தியடைய 50 புள்ளிகளை பெற வேண்டும்.
- பெறுபேற்றுத் தாளினை வழங்கும் போது “pass” அல்லது “Fail” என குறிப்பிடப்பட்டு பெறுபேறுகள் வழங்கப்படும்.

### அடையாளக் குறியீடு மற்றும் எழுத்துக்களின் வரைவிலக்கணம்

| அடையாளக் குறியீடு | வரைவிலக்கணம் |
|---|---|
| * | விலக்களிப்பு |
| # | விண்ணப்பிக்கவில்லை |
| + | சமூகமளிக்கவில்லை |
| ** | மாற்று அனுமதி |

### அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள்

பரீட்சைகளுக்கு விண்ணப்பிக்கும் போது அல்லது பரீட்சை பெறுபேறுகள் பற்றிய பிரச்சனைகளுக்கு இவ்வினாக்களை வாசிப்பதன் மூலம் தீர்வினை பெறலாம்.

### இறுதித் தீர்மானத்திற்கான அதிகாரம்

பரீட்சைகளை நடாத்துதல், பெறுபேறுகளை வெளியீடு செய்தல் தொடர்பான இறுதி தீர்மானமெடுக்கும் அதிகாரம் AAT இலங்கையின் ஆளுகைக் குழுவினை சார்ந்தது.

# பரீட்சைக்கட்டமைப்பு



தொழில்நுட்ப பாடங்கள்

| முதலாம் மட்டம் | | | |
|---|---|---|---|
| வினாத்தாள் | பாட இலக்கம் | குறியீடு | காலம் |
| நிதிக் கணக்கீடு | 1901 | FAC | 03 மணி நேரம் |
| வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் | 1902 | BMS | 03 மணி நேரம் |
| பொருளியல் | 1603 | ECN | 03 மணி நேரம் |
| வணிகச் சூழல் | 1604 | BEN | 03 மணி நேரம் |

| இரண்டாம் மட்டம் | | | |
|---|---|---|---|
| வினாத்தாள் | பாட இலக்கம் | குறியீடு | காலம் |
| உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் | 2801 | FCA | 03 மணி நேரம் |
| டிஜிடல் மாற்றம் மற்றும் தகவல் முறைமை | 2802 | DTI | 03 மணி நேரம் |
| வணிகச் சட்டம் | 2803 | BLA | 03 மணி நேரம் |
| வணிக முகாமைத்துவம் | 2804 | BMA | 03 மணி நேரம் |

| மூன்றாம் மட்டம் | | | |
|---|---|---|---|
| வினாத்தாள் | பாட இலக்கம் | குறியீடு | காலம் |
| நிதி அறிக்கையிடல் | 3801 | FAR | 03 மணி நேரம் |
| முகாமைக் கணக்கீடும் நிதியியலும் | 3802 | MAF | 03 மணி நேரம் |
| இடர் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வும் | 3803 | RCA | 03 மணி நேரம் |
| நிறுவன மற்றும் தனிநபர் வரியியல் | 3804 | CPT | 03 மணி நேரம் |

திறன் பாடம் (Talent subject)

| வினாத்தாள் | பாட இலக்கம் | குறியீடு | காலம் |
|---|---|---|---|
| வியாபாரத் தொடர்பாடல் * | **305** | **BC** | **03** மணி நேரம் |

*வணிகத் தொடர்பாடல் (BC) பாடம் ஆங்கில மொழி மூலமே நடைபெறும் 2ம் அல்லது 3ம் மட்டங்களில் மட்டுமே முடியும்.*

- ஏனைய அனைத்து பாடங்களிலும் உங்களுக்குத் தேவையான /இலகுவான மொழி தேர்வை மேற்கொள்ளலாம். ( ஆங்கிலம், தமிழ், சிங்களம் )
- புதிய பாடத்திட்டத்திற்கான முதல் பரீட்சை ஜூலை 2026 இல் ஆரம்பமாகும்.

# 05. செயல் வினைச் சொற்களின் சரிபார்ப்புப் பட்டியல்

ஒரு தரப்பட்ட தலைப்புக்கு ILO இன் இறுதியில் பயன்படுத்தப்படும் வினைச்சொல், எதிர்பார்க்கப்படும் ஆற்றல் மட்டத்தைக் குறிக்கிறது. தெளிவு மற்றும் துல்லியத்தை உறுதி செய்வதற்காக, வெவ்வேறு ஆற்றல் மட்டங்களுக்கு ஒத்த கவனமாக வரையறுக்கப்பட்ட செயல் வினைச் சொற்களின் தொகுப்பு கீழே உள்ள அட்டவணையில் தரப்படுகின்றது. இந்த வினைச் சொற்கள், ஒவ்வொரு ILO இனதும் இறுதியில் முறையாகக் கூட்டிணைக்கப்பட்டுள்ளன. அவை அந்தந்தத் தலைப்புகளுக்குத் தேவையான அறிவு, புரிதல், பிரயோகம், மற்றும் பகுப்பாய்வுத் திறன்களின் ஆழத்திற்கு இணங்க மாறுபடும்.

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **நினைவிற் கொள்ளல்**<br><br>உண்மைகள், பதங்கள், அடிப்படை எண்ணக்கருக்கள், அல்லது பதில்கள் எதைக் குறிக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ளும் தேவையின்றி அவற்றை நினைவிற் கொள்ளுதல் | அடையாளங் காண்க இனங்காண்க/ (Identify) | யாரையாவது அல்லது எதையாவது ஏற்பிசைவு செய்தல் | தலைப்பின் பிரதான பகுதிகளை கண்டுபிடித்து, பெயரிடுதல் |
| | வரையறுக்க (Define) | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் கருத்து | ஒரு பதம் அல்லது எண்ணக்கருவின் தெளிவான கருத்தை வழங்குதல் |
| | ஏற்பிசைவு செய்க (Recognize) | முன்பு பார்த்த ஒன்றைப் பற்றிய விழிப்புணர்வு | முந்தைய கற்றலில் இருந்து ஏதாவது ஒன்றைக் கண்டறிந்து ஏற்றுக் கொள்ளல் |
| | குறிப்பிடுக/ கூறுக (State) | தகவலின் தெளிவானதும் சுருக்கமானதுமான வெளிப்பாடு | பிரதான விடயங்கள் அல்லது எண்ணக்கருக்களை நேரடியான முறையில் வெளிப்படுத்தல் |
| | பட்டியலிடுக/ நிரற்படுத்துக. (List) | பெயர்கள், எண்கள், அல்லது உருப்படிகளின் தொடர் | பிரதான விடயங்களை ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் எழுதுதல் |
| | பதிவு செய்க (Record) | ஒரு முறைமையில் விவரங்களை உள்ளிடல் (கணக்கீடு அல்ல). | தொடர்புடைய விவரங்களை தெளிவாகவும் துல்லியமாகவும் உள்ளிடுதல் |
| **விளங்கிக் கொள்ளல்**<br><br>தகவல் சாதனங்களின் பொருளைப் புரிந்து கொள்ளுதலும் அதன் உட்பொருளை விளக்குவதற்கு அல்லது அதனை விபரிப்பதற்கு இயலுமாக இருத்தல் | கட்டியெழுப்புக (Construct) | கூறுகளை இணைப்பதன் மூலம் எதையாவது உருவாக்குதல் | வெவ்வேறு பகுதிகளைக் கொண்டு ஒரு முழுமையான கருத்துள்ளதாக ஆக்குதல் |
| | வேறுபடுத்துக (Differentiate) | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருள்களுக்கு இடையேயான வேறுபாடுகளை ஏற்பிசைவு செய்தல் | எண்ணக்கருக்கள் அல்லது உருப்படிகளுக்கு இடையேயான வேறுபாடுகளை கோடிட்டுக் காட்டுதல் |
| | கலந்துரையாடுக / ஆராய்க (Discuss) | ஒரு தலைப்பைப் பற்றிய பல்வேறு கருத்துக்கள் மற்றும் அபிப்பிராயங்களைக் கருதுதல் | பல்வேறு கண்ணோட்டங்களை ஆராய்ந்து நுண்ணறிவுகளை வழங்குதல் |
| | விபரிக்க (Explain) | எதையாவது பெரியளவில் விரிவாகத் தெளிவுபடுத்தல் | தர்க்கரீதியான மற்றும் விரிவான விளக்கங்களை வழங்குதல் |
| | எடுத்துக்காட்டுகளுடன் விபரிக்குக (Illustrate) | ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த உதாரணங்கள், விளக்கப்படங்கள், அல்லது காட்சிகளை பயன்படுத்தல் | பொருத்தமான உதாரணங்கள் அல்லது காட்சிகளுடன் விபரிப்புகளை ஆதரித்தல் |
| | உட்பொருளை விளக்குக (Interpret) | தகவல் அல்லது செயல்களின் அர்த்தத்தை விபரித்தல் | உங்கள் சொந்த மொழிநடையில் ஏதாவதொன்றின் பொருளை விபரித்தல் |
| | விளக்குக (Describe) | ஏதாவதொன்றின் விரிவான விளக்கம் | கட்டமைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய விவரங்களை வழங்குதல் |
| | பொழிப்பாக்குக (Summarise) | பிரதான விடயங்களின் சுருக்கமான கூற்று | பிரதான தகவல்களைச் சுருக்கமாக முன்வைத்தல் |
| **பிரயோகித்தல்**<br><br>கற்றுக்கொண்ட விடயத்தை புதிய மற்றும் உறுதியான சூழ்நிலைகளில் பயன்படுத்துதல். இதற்கு அறிவு மற்றும் திறன்களின் நடைமுறைப் பிரயோகம் தேவைப்படுகிறது.. | பிரயோகிக்க (Apply) | ஒரு சூழ்நிலையில் அறிவு, திறன்கள், அல்லது விதிகளைப் பயன்படுத்தல் | ஒரு முடிவை அடைய தொடர்புடைய அறிவு, அல்லது நுட்பங்களைப் பயன்படுத்தல் |
| | கணிக்குக / கணிப்பீடு செய்க (calculate) | கணித அல்லது தர்க்க முறைகள் ஊடாக பெறுமதியை தீர்மானித்தல் | ஒரு தீர்வை அடைய எண் அல்லது தர்க்கரீதியான செயன்முறைகளைப் பயன்படுத்தல் |
| | தீர்மானிக்க (Determine) | ஆய்வு அல்லது கணக்கீடு மூலம் ஏதாவதொன்றை நிறுவுதல் | கணக்கீடு அல்லது ஆய்வுக்காக ஏதாவதொன்றை கண்டுபிடித்தல் அல்லது முடிவு செய்தல் |
| | செயல் விளக்கமளிக்குக (Demonstrate) | ஒரு செயன்முறை அல்லது முறையைக் காண்பித்தல் | கட்டமைக்கப்பட்ட படிமுறைகள் ஊடாக தெளிவான உதாரணத்தைக் காட்டுதல் |
| | தயாரிக்க (Prepare) | பயன்பாட்டிற்கான பொருள்கள் அல்லது தகவல்களை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியில் ஈடுபடுவதற்கு முன் தேவையான விவரங்களை வரிசைப்படுத்தல் |
| | பயன்படுத்துக (Use) | ஒரு நோக்கத்திற்காக எண்ணக்கரு, கருவி, அல்லது முறையைப் பிரயோகித்தல் | தொடர்புடைய அறிவு அல்லது வளங்களைப் பொருத்தமானவாறு நடைமுறைப்படுத்தல் |
| | முன்வைக்குக (Present) | தகவல்களை பயனுறுதிமிக்க வகையில் பகிர்தல் | பிரதான நுண்ணறிவுகளை தெளிவாகவும் தொழில்முறை ரீதியாகவும் வழங்குதல் |

| மட்டம் | செயல் வினைச்சொல் | வரைவிலக்கணம் | மாணவர்களுக்கான விபரமான அறிவுறுத்தல்கள் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு**<br><br>தகவல்களின் கட்டமைப்பு மற்றும் தொடர்பை புரிந்து கொள்வதற்கு தகவல்களை கூறுகளாகப் பிரித்தல் | பகுப்பாய்வு செய்க (Analyse) | ஒரு பொருளை அதன் பாகங்களைப் புரிந்துகொள்ள விரிவாக ஆராய்தல் | சிறந்த புரிதலுக்காக தகவலை பிரதான பகுதிகளாகப் பிரித்தல் |
| | ஒப்பிடுக (Compare) | ஒற்றுமைகள் மற்றும் / அல்லது வேறுபாடுகளை ஆராய்தல் | பிரதான பொதுவான தன்மைகள் மற்றும் வேறுபாடுகளைச் சுட்டிக் காட்டுதல் |
| | பிரித்தறிக (Distinguish) | தனித்துவமான பண்புகளை ஏற்பிசைவு செய்தல் | பொருள்களை ஒன்றிலிருந்தொன்று எது வேறுபடுத்துகிறது என்பதை அடையாளங் காணல் |
| | பரீட்சிக்க / சோதிக்க (Examine) | ஏதாவது ஒன்றின் தன்மையைத் தீர்மானிக்க அதனைப் பரிசோதித்தல் | ஏதாவது ஒன்றைப் பற்றி நன்கு புரிந்து கொள்ள அதைக் கூர்ந்து பார்த்தல் |
| | கோடிட்டுக் காட்டுக (Outline) | பிரதான விடயங்களின் பொழிப்பு | பிரதான அம்சங்களின் ஓர் ஒழுங்கமைக்கப்பட்ட கண்ணோட்டத்தை வழங்குதல் |
| | நடத்துக (Conduct) | ஒரு பரிசோதனை, கணக்கெடுப்பு, அல்லது ஆய்வுக்கான கூறுகளை ஒழுங்கமைத்தல் | ஒரு பணியை முறையாக முன்னெடுக்க கட்டமைக்கப்பட்ட படிமுறைகளைப் பின்பற்றுதல் |
| | அறிக்கையிடுக (Report) | கண்டறிதல்களின் கட்டமைக்கப்பட்ட முன்வைப்பு | பகுப்பாய்வு செய்யப்பட்ட தகவல்களை ஒரு தெளிவான மற்றும் தர்க்கரீதியான வடிவத்தில் முன்வைத்தல் |
| **மதிப்பீடு**<br><br>தேர்வு நிபந்தனை அல்லது நியமங்களின் அடிப்படையில் யோசனைகள் அல்லது பொருள்களின் பெறுமதி அல்லது தரம் குறித்து தீர்ப்புகளை வழங்குதல் | ஆலோசனை வழங்குக (Advise) | யோசனைகள் அல்லது பரிந்துரைகளை வழங்குதல் | பகுப்பாய்வின் அடிப்படையில் தகவலறிந்த வழிகாட்டலை வழங்குதல் |
| | மதிப்பீடு செய்க (Evaluate) | பெறுமதி, பயனுறுதித்தன்மை, அல்லது தாக்கத்தின் விமர்சன ரீதியான மதிப்பீடு | தேர்வு நிபந்தனைகளின் அடிப்படையில் ஏதாவது ஒன்றின் தரம் அல்லது தொடர்புடைமையை மதிப்பிடுதல் |
| | அமைக்குக (Formulate) | ஒரு கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை அல்லது திட்டத்தின் அபிவிருத்தி | நன்கு வரையறுக்கப்பட்ட முறை அல்லது உபாயத்தை உருவாக்குதல் |
| | பரிந்துரை செய்க (Recommend) | பொருத்தமான செயல் திட்டம் பற்றி யோசனை முன்வைத்தல் | தர்க்கரீதியான பகுத்தறிவால் ஆதரிக்கப்படும் ஒரு அணுகுமுறையை முன்மொழிதல் |
| **உருவாக்குதல்**<br><br>ஒரு ஒத்திசைவான அல்லது செயற்பாட்டு முழுமையை உருவாக்க, புதுமையான வழிகளில் கூறுகளை இணைத்தல்; புதிய யோசனைகள், உற்பத்திகள், அல்லது புரிதல் வழிகளை உருவாக்கும் ஆற்றல் | உருவாக்குக (Create) | புதிதாக ஏதாவதொன்றை உருவாக்குதல் | அசலான மற்றும் நோக்கமுள்ள ஏதாவதொன்றை விருத்தி செய்தல் |
| | மதிப்பிடுக (Assess) | தரம், ஆற்றல், அல்லது தன்மை பற்றி மதிப்பீடு செய்தல் அல்லது மதிப்பிடுதல் | கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் நியாயமான தீர்ப்பை வழங்குதல் |
| | விருத்தி செய்க (Develop) | ஒரு யோசனை, பொருள், அல்லது எண்ணக்கருவின் விரிவாக்கம் அல்லது செம்மையாக்கம் | காலப்போக்கில் ஒரு யோசனையை வலுப்படுத்தி, மேம்படுத்துதல் |
| | முன்மொழிக (Propose) | கருத்திற் கொள்வதற்காக ஒரு திட்டத்தை அல்லது எண்ணக் கருவைப் பரிந்துரைத்தல் | ஒரு யோசனை அல்லது கட்டமைக்கப்பட்ட பரிந்துரையை முன்வைத்தல் |
| | இணைப்பாக்கம் செய்க (Synthesis) | ஒரு ஒத்திசைவான முழுமையை உருவாக்க பல்வேறு கூறுகளையும் ஒருங்கிணைத்தல் | பல யோசனைகள் அல்லது நுண்ணறிவுகளை ஒரு அர்த்தமுள்ள முடிவில் ஒருங்கிணைத்தல் |
| | வடிவமைக்குக (Design) | ஏதாவது ஒன்றிற்கான ஒரு கட்டமைக்கப்பட்ட திட்டத்தை உருவாக்குதல் | ஒரு பொருள் அல்லது செயன்முறைக்கு ஒரு விரிவான கட்டமைப்பை அமைத்தல் |
| | தொகுக்குக (Compile) | பல்வேறு மூலங்களில் இருந்து தகவல்களை ஒன்றுசேர்த்தல் | சேகரிக்கப்பட்ட தரவுகளை ஒரு விரிவான வடிவத்தில் ஒழுங்கமைத்தல் |

STUDENTS' GUIDE

# வினாத்தாள் கட்டமைப்பு

(2025ம் ஆண்டு ஜூலை மாதத்திலிருந்து நடைமுறைக்கு வருகின்றது.)

| | |
|---|---|
| மட்டம் I | பகுதி **A – 40** புள்ளிகள் **(OTQs)**<br>10 – 20 OTQ வினாக்கள் (1,2,3 அல்லது 4 புள்ளிகள் ) |
| | பகுதி **B – 40** புள்ளிகள்<br>4 கட்டாய வினாக்கள், ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்டிருக்கும். சிறு காட்சி /epfo;tpDhlhf வினா தொகுக்கப்படக்கூடும். |
| | பகுதி **C – 20** புள்ளிகள்<br>20 புள்ளிகளைக் கொண்ட ஒரு கட்டாய வினா, நடுத்தர அளவிலான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு வினா தொகுக்கப்படக்கூடும். |
| மட்டம் II | பகுதி **A – 25** புள்ளிகள் **(OTQs)**<br>8 – 15 OTQ வினாக்கள் (1,2,3 அல்லது 4 புள்ளிகள் ) |
| | பகுதி **B – 50** புள்ளிகள்<br>5 கட்டாய வினாக்கள், ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்டிருக்கும். சிறு காட்சி /epfo;tpDhlhf வினா தொகுக்கப்படக்கூடும். |
| | பகுதி **C – 25** புள்ளிகள்<br>25 புள்ளிகளைக் கொண்ட ஒரு கட்டாய வினா, நடுத்தர அளவிலான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு வினா தொகுக்கப்படக்கூடும். |
| மட்டம் III | பகுதி **A – 20** புள்ளிகள்<br>4 கட்டாய வினாக்கள், ஒவ்வொன்றும் 05 புள்ளிகளைக் கொண்டிருக்கும். சிறு காட்சி /epfo;tpDhlhf வினா தொகுக்கப்படக்கூடும் |
| | பகுதி **B – 30** புள்ளிகள்<br>3 கட்டாய வினாக்கள், ஒவ்வொன்றும் 10 புள்ளிகளைக் கொண்டிருக்கும். சிறு காட்சி /epfo;tpDhlhf வினா தொகுக்கப்படக்கூடும். |
| | பகுதி **C – 50** புள்ளிகள்<br>2 அல்லது 3 கட்டாய வினாக்கள், 10இ 15அல்லது 25 புள்ளிகளைக் கொண்டிருக்கும். நடுத்தர அளவிலான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு வினா தொகுக்கப்படக்கூடும். |

**குறிப்பு 01**

எல்லா வினாத்தாள்களும் 3 மணித்தியாலங்களைக் கொண்டது. 2 மற்றும் 3ம் மட்ட வினாத்தாள்களுக்கு மேலதிக வாசிப்பு நேரமாக 15 நிமிடங்கள் வழங்கப்படும். வணிகத் தொடர்பாடல் (BC) பாடத்திற்குரிய வினாத்தாள் 2ம் மட்ட வினாத்தாளை ஒத்ததாக காணப்படும்.

**குறிப்பு 02**

மாணவர்கள் முதலாம் மற்றும் 2ம் மட்ட பாடங்களுக்கு ஒரே தடவையில் விண்ணப்பிக்க முடியும். முதல் இரு மட்டங்களையும் பூரணப்படுத்திய பின்னரே 3ம் மட்டத்திற்கு விண்ணப்பிக்க முடியும்

**குறிப்பு 03**

முதலாம் மட்டத்தினை பூரணப்படுத்திய பின்னரே வணிகத் தொடர்பாடல் (BC) பாடத்திற்கு விண்ணப்பிக்க முடியும்

**குறிப்பு 04**

ஒவ்வொரு பாடத்திற்குமான சித்தி மட்டம் 50 புள்ளிகள் ஆகும்.

# 04. இடைக்கால ஏற்பாடுகள்

STUDENTS' GUIDE

## பாடங்கள் அடிப்படையில்

| பாடத்திட்டம் 2020-2025 | | பாடத்திட்டம் 2025-2030 | |
|---|---|---|---|
| 101 | நிதிக் கணக்கீடு (FAC) | 1901 | நிதிக் கணக்கீடு (FAC) |
| 102 | வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் (BMS) | 1902 | வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் (BMS) |
| 103 | பொருளியல் (ECN) | 1603 | பொருளியல் (ECN) |
| 104 | வணிகச் சூழல் (BEN) | 1604 | வணிகச் சூழல் (BEN) |
| 201 | உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் (AFC) | 2801 | நிதி மற்றும் கிரயக் கணக்கீடு (FCA) |
| 202 | டிஜிடல் சூழலில் தகவல் முறைமைகள் (ISD) | 2802 | டிஜிடல் மாற்றமும் தகவல் முறைமைகளும் (DTI) |
| 203 | வணிகச் சட்டம் (BLA) | 2803 | வணிகச் சட்டம் (BLA) |
| 204 | வணிக முகாமைத்துவம் (BMA) | 2804 | வணிக முகாமைத்துவம் (BMA) |
| 301 | நிதி அறிக்கையிடல் (FAR) | 3801 | நிதி அறிக்கையிடல் (FAR) |
| 302 | முகாமைத்துவக் கணக்கீடும் நிதியும் (MAF) | 3802 | முகாமைத்துவக் கணக்கீடும் நிதியும் (MAF) |
| 303 | நிதிக் கட்டுப்பாடுகளும் கணக்காய்வும் (FCA) | 3803 | இடர், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு (RCA) |
| 304 | நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல் (CPT) | 3804 | நிறுவனம் மற்றும் தனிநபர் வரியியல் (CPT) |
| 310 | வணிகத் தொடர்பாடல் (BC) | 305 | வணிகத் தொடர்பாடல் (BC) |

## மட்டங்கள் அடிப்படையில்

| பாடத்திட்டம் 2020-2025 | பாடத்திட்டம் 2025-2030 |
|---|---|
| மட்டம் -I இலுள்ள அனைத்துப் பாடநெறிகளையும் பூர்த்தி செய்த மாணவர்கள் | அவர்களுக்கு மட்டம் I இலுள்ள அனைத்துப் பாடநெறிகளிலிருந்தும் விலக்களிக்கப்படும். |
| மட்டம் - I மற்றும் மட்டம் - II இலுள்ள அனைத்துப் பாடநெறிகளையும் பூர்த்தி செய்த மாணவர்கள் | அவர்களுக்கு மட்டம் - I மற்றும் மட்டம் - II இலுள்ள அனைத்துப் பாடநெறிகளில் இருந்தும் விலக்களிக்கப்படும். |
| வணிகத் தொடர்பாடல் (BC) தவிர, மட்டம் I, மட்டம் II, மற்றும் மட்டம் III இலுள்ள அனைத்துப் பாடநெறிகளையும் பூர்த்த செய்த மாணவர்கள் | அவர்களுக்கு வணிகத் தொடர்பாடல் (BC) தவிர, மட்டம் I, மட்டம் II, மற்றும் மட்டம் III இலுள்ள அனைத்துப் பாடநெறிகளில் இருந்தும் விலக்களிக்கப்படும். |



எனது வாழ்வின் இலட்சியத்தை அடைவதற்கு

# திடசங்கற்பம்

STUDENTS' GUIDE

| தூண் | கணக்கீடும் நிதியும் |
| --- | --- |
| தொகுதிக் குறியீடு | FAC 1901 நிதிக் கணக்கீடு |
| தொகுதியின் நோக்கம் | இந்த அறிமுகக் கணக்கீட்டுப் பாடநெறியானது மாணவர்கள் மத்தியில் கணக்கீட்டு எண்ணக்கருக்கள், கோட்பாடுகள், மற்றும் நடைமுறைகள் பற்றிய வலுவான புரிதலை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டுள்ளது. இது தனியுரிமை நிறுவனங்களுக்கான அடிப்படை நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கான அடிப்படைத் திறன்களை மாணவர்களுக்கு வழங்குவதில் கவனம் செலுத்துகிறது. விரிவுரைகள், நடைமுறைப் பயிற்சிகள், மற்றும் நிஜ உலக எடுத்துக்காட்டுகள் ஊடாக, தொழினுட்பம் சார்ந்த வணிகங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனச் சூழல்களில் கணக்கீட்டு அறிவைப் பிரயோகிப்பதில் மாணவர்கள் தேர்ச்சி பெறுவர். இந்தப் பாடநெறியானது கணக்கீடு மற்றும் நிதித் துறையில் உயர் கற்றல்களுக்கான முக்கியமான அடித்தளமாகச் செயற்படுகிறது. |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலம் |
| --- | --- | --- | --- |
| 1 | கணக்கீட்டிற்கான அறிமுகம் | 05% | 11 |
| 2 | கணக்கீட்டுச் சமன்பாடு, இரட்டைப் பதிவு முறைமை, கணக்கீட்டு எண்ணக்கருக்கள் | 25% | 56 |
| 3 | முதன்மைப் பதிவேடுகள், கட்டுப்பாட்டுக் கணக்குகள், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுகள், பரீட்சை மீதி | 35% | 79 |
| 4 | தனியுடமை வியாபாரத்திற்கான நிதிக் கூற்றுகளின் தயாரிப்பு | 30% | 68 |
| 5 | கணினிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டுச் சூழலும் நெறிமுறையாக இருப்பதன் முக்கியத்துவமும் | 5% | 11 |

| தூண் | செயற்றிறன் பகுப்பாய்வும் முகாமைத்துவமும் |
| --- | --- |
| தொகுதிக் குறியீடு | BMS 1902 வணிகக் கணிதமும் புள்ளிவிபரவியலும் |
| தொகுதியின் நோக்கம் | இந்தப் பாடநெறி அலகானது மாணவர்களுக்கு கணிதம் சார்ந்த கணிப்பீடுகள் மற்றும் புள்ளிவிபரப் பிரயோகங்கள் பற்றிய அடிப்படை அறிவை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வணிகச் சவால்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும் தீர்ப்பதற்கும் முக்கியமானதாகும். வணிகக் கணிதம் மற்றும் புள்ளிவிபரவியலில் நடைமுறைத் திறன்களைக் கொண்ட மாணவர்களைச் சித்தப்படுத்துவதன் மூலம் பல்வேறு வணிகத் துறைகளில் தீர்மானம் எடுப்பதற்கான அளவுசார் தீர்ப்புகளை வழங்குவதற்கு இந்தப் பாடநெறி அவர்களுக்கு உதவுகிறது. |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலம் |
| --- | --- | --- | --- |
| 01 | வணிகத்திற்கான அடிப்படைக் கணிதம் | 15% | 34 |
| 02 | வணிகத்திற்கான நிதிக் கணிதம் | 20% | 46 |
| 03 | வணிகத்திற்கான நிதிசார் செயற்பாட்டு அளவீடுகள் | 10% | 22 |
| 04 | தரவு முன்னிலைப்படுத்தலும் விவரண அளவீடுகளும் | 15% | 34 |
| 05 | இரண்டு கணிய மாறிகளை ஒப்பிடுதல் | 10% | 22 |
| 06 | நிகழ்தகவும் அதன் பிரயோகங்களும் | 15% | 34 |
| 07 | சுட்டெண்களும் காலத் தொடர் பகுப்பாய்வும் | 10% | 22 |
| 08 | வணிகப் பிரசினங்களுக்கான தீர்வுளும் தீர்மானமெடுத்தலுக்கான புள்ளிவிபரங்களும் | 05% | 11 |

| தூண் | செயற்றிறன் பகுப்பாய்வும் முகாமையும் |
| --- | --- |
| தொகுதிக் குறியீடு | ECN 1603 பொருளியல் |
| தொகுதியின் நோக்கம் | இந்தப் பாடநெறி அலகானது நுண்பாக மற்றும் பேரினப் பொருளியல்களில் அவசியமான அறிவை வழங்குவதையும் பொருளாதார அடிப்படைகளைப் பகுப்பாய்வு செய்வதற்கான அவர்களின் ஆற்றல்களை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. தலைப்புகளில் பொருளாதார எண்ணக்கருக்கள், கொள்கைகள் மற்றும் கோட்பாடுகள் ஆகியனவும் வணிக நடவடிக்கைகள் மற்றும் தீர்மானம் எடுப்பதன் மீது அவற்றின் தாக்கங்களை ஆராய்வதும் உள்ளடங்குகின்றன. இதன் ஊடாக, மாணவர்கள் பொருளாதாரம், நிதி முறைமைகள், பொது விலை மட்டங்கள் மற்றும் பரிமாற்று வீதங்கள் பற்றிய நுண்ணறிவுகளைப் பெறுவர். |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலம் |
| --- | --- | --- | --- |
| 01 | வணிகச் சூழலில் பொருளாதார எண்ணக்கருக்களும் முறைமைகளும் | 15% | 23 |
| 02 | கேள்வி, நிரம்பல், சமநிலை, மற்றும் அரசாங்கத் தலையீட்டு உபாயங்கள் | 20% | 30 |
| 03 | உற்பத்திச் செயன்முறைகள் மற்றும் பல்வகைச் சந்தைக் கட்டமைப்புகள். | 15% | 23 |
| 04 | பொருளாதார முகாமைத்துவத்தில் தேசிய கணக்கீடும் அரசாங்கத்தின் வகிபாகமும் | 20% | 30 |
| 05 | நிதி முறைமை, பணம், மற்றும் விலை மட்ட மாறல்கள் | 15% | 23 |
| 06 | சர்வதேச வர்த்தகமும் வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தையும் | 10% | 14 |
| 07 | பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி, மற்றும் வளர்ந்துவரும் போக்குகள் | 05% | 07 |

| தூண் | செயற்றிறன் பகுப்பாய்வும் முகாமையும் | |
|---|---|---|
| தொகுதிக் குறியீடு | BEN 1604 | வணிகச் சூழல் |
| தொகுதியின் நோக்கம் | இந்தப் பாடநெறியானது வணிகச் செயற்பாடுகள் மற்றும் தீர்மானம் எடுப்பதில் வணிகச் சூழலின் தாக்கம் தொடர்பில் கவனஞ் செலுத்தி, வணிக எண்ணக்கருக்களைப் புரிந்து கொள்வதற்கான திறன்களை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கவனம் செலுத்தும் பிரதான பகுதிகளில் குறிப்பாக நிறுவனச் சூழமைவுடன், ஆதரவுச் சேவைகள், அரசாங்கத்தின் செல்வாக்குகள், சமூகத் தாக்கங்கள், மற்றும் வணிக நெறிமுறைகள் போன்றவை உள்ளடங்கும். மேலும், இந்தப் பாடநெறி SME-களின் முக்கியத்துவம், தொழில்முனைவு, மற்றும் பொருளாதார வளர்ச்சியில் நிதிச் சந்தைகளின் வகிபாகம் ஆகியவற்றை எடுத்துக் காட்டுகிறது. | |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 01 | வணிகத்தின் எண்ணக்கருக்கள், வணிகச் சூழல் மற்றும் வணிக நிறுவனங்கள் மீதான அதன் தாக்கம் | 15% | 23 |
| 02 | நிறுவனங்களின் பல்வேறு வகைகள் | 15% | 23 |
| 03 | வணிகங்களுக்கான ஆதரவுச் சேவைகள் | 30% | 45 |
| 04 | வணிக நிறுவனங்களில் வியாபாரம் | 10% | 15 |
| 05 | வணிகங்களில் அரசாங்கத்தின் செல்வாக்குகள் | 05% | 07 |
| 06 | பொருளாதாரம் ஒன்றின் அபிவிருத்திக்கு தொழில்முனைவு மற்றும் SMEகளின் பங்களிப்பு | 15% | 23 |
| 07 | வணிகமொன்றின் சமூகப் பொறுப்பு மற்றும் வணிக நெறிமுறையின் முக்கியத்துவம் | 05% | 07 |
| 08 | இலங்கையில் நிதிச் சந்தைச் செயற்பாடுகள் | 05% | 07 |

## முதலாம் மட்டம்

| தூண் | கணக்கீடும் நிதியும் | |
|---|---|---|
| தொகுதிக் குறியீடு | FAC 2801 | நிதி மற்றும் கிரயக் கணக்கீடு |
| தொகுதியின் நோக்கம் | இந்த மேம்பட்ட பாடநெறியானது மட்டம் I இல் உள்ளடக்கப்பட்ட அடிப்படை நிதிக் கணக்கீட்டுக் கோட்பாடுகள் மீது கட்டியெழுப்பப்படுகிறது. பங்குடமைகள், பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள், இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கோட்பாட்டு ரீதியான அறிவையும் திறன்களையும் பிரயோகிப்பதற்கான மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இப்பாடநெறியானது பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான கிரயங்களைக் கண்டறிவதில் கவனஞ் செலுத்தி, அடிப்படைக் கிரயக் கணக்கீட்டு எண்ணக்கருக்கள் மற்றும் நுட்பங்களை அறிமுகப்படுத்துகிறது. இந்தப் பாடநெறி முடிவடைவதற்குள், மாணவர்கள் நிதி மற்றும் கிரயக் கணக்கீடு ஆகியன பற்றிய விரிவான புரிதலைப் பெறுவார்கள். இதனால் அவர்கள் பல்வேறு நிறுவனக் கட்டமைப்புகளை பயனுறுதிமிக்க வகையில் முகாமை செய்யவும் அறிக்கையிடவும் முடியும். | |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 1 | நிதிக் கூற்றுக்களின் கூறுகள் மற்றும் பகுதிகளும், நிதிக் கூற்றுக்களுக்கான சீராக்கங்களும் | 10% | 20 |
| 2 | பங்குடமைக்கான நிதிக் கூற்றுக்கள் | 15% | 30 |
| 3 | பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான நிதிக் கூற்றுக்கள் (உள்ளக நோக்கத்திற்கு மாத்திரம்) | 20% | 40 |
| 4 | பூரணமற்ற பதிவுகளைப் பயன்படுத்தி நிதிக் கூற்றுக்கள், மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான நிதிக் கூற்றுக்கள் | 20% | 40 |
| 5 | கிரயக் கணக்கீடு | 35% | 70 |

| தூண் | டிஜிடலும் தொடர்பாடலும் | |
|---|---|---|
| தொகுதிக் குறியீடு | DTI 2802 | டிஜிடல் மாற்றமும் தகவல் முறைமைகளும் |
| தொகுதியின் நோக்கம் | இந்தத் தொகுதி நவீன நிறுவனங்களில் டிஜிடல் மாற்றம் மற்றும் தகவல் முறைமைகளின் வகிபாகம் பற்றிய விரிவான புரிதலை வழங்குகிறது. இது தகவல் முறைமைகள், IT உட்கட்டமைப்பு, இணையப் பாதுகாப்பு, மற்றும் வளர்ந்துவரும் தொழினுட்பப் போக்குகள் ஆகியவற்றின் பிரதான எண்ணக்கருக்களை உள்ளடக்குகிறது. மாணவர்கள் வணிகச் செயன்முறைகளைப் பகுப்பாய்வு செய்தல், தரவுகளை முகாமை செய்தல், மற்றும் தீர்மானமெடுத்தலுக்கான தொழினுட்பத்தை மேம்படுத்தல் ஆகியவற்றில் திறன்களை வளர்த்துக் கொள்வர். மேலும், இப்பாடநெறியானது தகவல் முறைமைகளைப் பின்பற்றுதல் மற்றும் பயன்படுத்தலில் நெறிமுறை, சமூக, மற்றும் சட்ட அக்கறைகளை வலியுறுத்துகிறது. | |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 1 | தகவல் முறைமைகளின் எண்ணக்கருக்கள் மற்றும் தகவல் முறைமைகளின் தாக்கம் | 10% | 20 |
| 2 | தகவல் தொழினுட்ப உட்கட்டமைப்பு | 20% | 40 |
| 3 | நிறுவனங்களில் தகவல் முறைமைகள் | 25% | 50 |
| 4 | இணையப் பாதுகாப்பும் தரவுத் தனியுரிமையும் | 15% | 30 |
| 5 | தகவல் முறைமைகளில் தாக்கம் செலுத்தும் தொழினுட்பப் போக்குகள் | 15% | 30 |
| 6 | தகவல் முறைமைகளின் நெறிமுறை, சமூக, சட்டச் சூழல் | 15% | 30 |

| தூண் | சட்டம், வரியியல் மற்றும் கணக்காய்வு | |
|---|---|---|
| தொகுதிக் குறியீடு | BLA 2803 | வணிகச் சட்டம் |
| தொகுதியின் நோக்கம் | இந்தத் தொகுதியானது இலங்கையில் வணிக நடவடிக்கைகளை ஆளுகை செய்யும் சட்ட மற்றும் ஒழுங்குமுறை வேலைச் சட்டகம் பற்றிய விரிவான புரிதலை மாணவர்களுக்கு வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஒப்பந்தச் சட்டம், பொருள்கள் விற்பனைச் சட்டம், முகவராண்மைச் சட்டம், நிறுவன மற்றும் பங்குடமைச் சட்டம், மாற்றத்தகு சாதனங்கள், தொழிற் சட்டம், காப்புறுதிச் சட்டம், மற்றும் மத்தியஸ்தம் மற்றும் நடுவர் தீர்ப்பாயம் போன்ற பிணக்குத் தீர்க்கும் பொறிமுறைகள் உள்ளிட்ட பிரதான பகுதிகளைக் கொண்டுள்ளது. மேலும், தொகுதியானது வணிகச் சூழலில் உள்ள குற்றங்கள் மற்றும் பிணையங்கள் வர்த்தகத்தில் உருவாகும் ஒழுங்கு விதிகள் பற்றி ஆராய்கிறது. | |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத் துவம் | உத்தேச மணித்தியா லங்கள் |
|---|---|---|---|
| 1 | இலங்கையின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை வேலைச் சட்டகத்தின் அறிமுகம் | 8% | 16 |
| 2 | ஒப்பந்தச் சட்டம் | 15% | 30 |
| 3 | பொருள்கள் விற்பனைச் சட்டம் | 15% | 30 |
| 4 | முகவராண்மைச் சட்டம் | 10% | 20 |
| 5 | நிறுவனச் சட்டமும் பங்குடமைச் சட்டமும் | 12% | 24 |
| 6 | கைமாற்றத்தகு சாதனங்களுக்குப் பொருத்தமான சட்டம் | 08% | 16 |
| 7 | தொழிற் சட்டம் | 10% | 20 |
| 8 | காப்புறுதிச் சட்டம் | 10% | 20 |
| 9 | வணிகச் சூழலுடன் தொடர்புடைய குற்றங்களும் புதிய ஒழுங்குவிதிகளும் மற்றும் பிணையங்களின் வர்த்தகம் | 12% | 24 |

| தூண் | செயற்றிறன் பகுப்பாய்வும் முகாமைத்துவமும் |
|---|---|
| தொகுதிக் குறியீடு | **BMA 2804** வணிக முகாமைத்துவம் |
| தொகுதியின் நோக்கம் | இந்தப் பாடநெறியானது சந்தைப்படுத்தல், நிதி, செயற்பாடுகள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் மனித வளங்கள், மற்றும் தொழில்முனைவு உள்ளிட்ட முக்கிய வணிகத் தொழிற்பாடுகள் குறித்த மாணவர்களின் அறிவை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. திறனாய்வுச் சிந்தனை, சிக்கல்களைத் தீர்க்கும் திறன், பகுப்பாய்வுத் திறன்களை விருத்தி செய்வது இப்பாடநெறியின் நோக்கமாகும். இதனால் மாணவர்கள் வணிகச் சூழ்நிலைகளை மதிப்பிடவும், உபாயங்களை விருத்தி செய்யவும், உற்பத்தித்திறன் வாய்ந்த தீர்வுகளைச் செயற்படுத்தவும் முடியும். இந்தப் பாடநெறி முடிவதற்குள் மாணவர்கள் அடிப்படை முகாமைத்துவக் கோட்பாடுகளை நிஜ உலக சவால்களுக்குப் பிரயோகிக்கவும் திறனாய்வு ரீதியாகச் சிந்திக்கவும் பல்வேறு வணிகச் சூழல்களில் தகவலறிந்த தீர்மானம் எடுக்கவும் தயாராக இருப்பார்கள். அவர்கள் தமது தலைமைத்துவம், அணி வேலை, மற்றும் தொடர்பாடல் திறன்களை மேம்படுத்துவார்கள். அதே நேரத்தில் வணிகச் சிக்கல்களைப் பகுப்பாய்வு செய்து, பயனுறுதியான தீர்வுகளை நடைமுறைப்படுத்தும் திறனையும் விருத்தி செய்வார்கள். தகவமைப்புத் திறன், நெறிமுறையான தீர்மானமெடுத்தல், மற்றும் நவீன வணிக நடைமுறைகள் பற்றிய விரிவான புரிதலை வளர்ப்பதன் மூலம் இந்தப் பாடநெறி மாணவர்களை வெற்றிகரமான வாழ்க்கைக்குத் தயார்படுத்துகிறது. |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத் துவம் | உத்தேச மணித்தியா லங்கள் |
|---|---|---|---|
| 01 | முகாமைத்துவத்திற்கான அறிமுகமும் முகாமைத்துவத்தின் வெவ்வேறு கண்ணோட்டங்களும் | 10 % | 20 |
| 02 | முகாமைத்துவச் செயன்முறையின் தொழிற்பாடுகள் | 30% | 60 |
| 03 | வழங்கல் சங்கிலியும் தொழிற்பாட்டு முகாமைத்துவமும் | 15% | 30 |
| 04 | சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | 15% | 30 |
| 05 | மனித வள முகாமைத்துவம் | 15% | 30 |
| 06 | மாற்ற முகாமைத்துவம் | 5% | 10 |
| 07 | உபாய முகாமைத்துவத்திற்கான அறிமுகம் | 10% | 20 |

## மூன்றாம் மட்டம்

| தூண் | கணக்கீடும் நிதியும் |
|---|---|
| தொகுதிக் குறியீடு | **FAR 3801** நிதி அறிக்கையிடல் |
| தொகுதியின் நோக்கம் | நிதி அறிக்கையிடலின் எண்ணக்கரு வேலைச்சட்டகம், ஆளுகைக் கட்டமைப்புகள், நெறிமுறைகள், மற்றும் LKAS, SLFRS இன் ஒழுங்குமுறை மற்றும் வெளிப்படுத்துகைத் தேவைகள் ஆகியன பற்றிய விரிவான புரிதலை வழங்குவதன் ஊடாக இப்பாடநெறி தொடங்குகிறது. நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதிலும் நிதிசார் மற்றும் நிதிசாரா தரவுகளைப் பகுப்பாய்வு செய்து, விளக்குவதிலும் தீர்மானமெடுத்தலுக்கான தகவல்களை வழங்குவதிலும் மாணவர்களின் திறன்களை மேம்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், உரிமங்களினுள் நிதி மற்றும் நிதி சாரா தகவல்களைத் தயாரித்தல் மற்றும் பயன்படுத்துவதில் எழும் சிக்கல்களுக்கான நெறிமுறைசார்ந்த பதில்களை இப்பாடநெறி வலியுறுத்துகிறது. |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத் துவம் | உத்தேச மணித்தியா லங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆளுகைக் கட்டமைப்பு, கணக்கீட்டில் நெறிமுறைகளின் முக்கியத்துவம், ஒருங்கிணைந்த அறிக்கையிடலும் நிலைபேறான அறிக்கையிடலும், மற்றும் நிதி அறிக்கையிடலின் எண்ணக்கரு வேலைச்சட்டகம் | 10% | 20 |
| 2 | நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் ஒழுங்குமுறைத் தேவைகள், பிரயோக மற்றும் வெளிப்படுத்துகைத் தேவைகள் | 30% | 60 |
| 3 | பிரசுரிப்பு நோக்கங்களுக்காக பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிக்கான நிதிக் கூற்றுக்கள் | 30% | 60 |
| 4 | நிதி மற்றும் நிதிசாரா தரவுகள் மற்றும் தகவல்களின் விளக்கம் | 10% | 20 |
| 5 | ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் | 15% | 30 |
| 6 | கணக்கீடு மற்றும் நிதி அறிக்கையிடல் செயன்முறையின் டிஜிடல்மயமாக்கல் | 05% | 10 |

| தூண் | கணக்கீடும் நிதியும் |
|---|---|
| தொகுதிக் குறியீடு | MAF 3802 முகாமைத்துவக் கணக்கீடும் நிதியும் |
| தொகுதியின் நோக்கம் | இந்தப் பாடநெறியானது மாணவர்களுக்கு முகாமைத்துவக் கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய நல்ல புரிதலையும் தொடர்புடைய முகாமைத்துவக் கணக்கீட்டு நுட்பங்களைப் பிரயோகிப்பதற்கான ஆற்றலையும் வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு நிறுவனத்தின் வெற்றிக்குப் பங்களிக்கிறது. நவீன முகாமைத்துவக் கணக்கீடானது தீர்மானமெடுத்தல், திட்டமிடல், மற்றும் கட்டுப்படுத்தல் ஆகியவற்றில் கவனஞ் செலுத்துகிறது. இது நாளாந்த மற்றும் உபாயத் தீர்மானங்களை ஆதரிக்கிறது. இது குறுகிய மற்றும் நீண்டகால திட்டமிடலை ஆதரிப்பதுடன் கட்டுப்பாடு, செயற்றிறன் அளவீடு, மற்றும் அன்றாட முகாமைக்கான தகவல்களை உருவாக்குகிறது. முகாமைத்துவக் கணக்கீட்டு அறிக்கைகள் நிதிசாராத தகவல்களை உள்ளடக்கியிருக்கலாம், இது நிதித் தரவுகளுடன் இணைந்து, பல்வேறு செயன்முறைகள், நடைமுறைகள், தொழிற்பாடுகள், நடவடிக்கைகள், மற்றும் ஒரு நிறுவனத்தின் உபாய இலக்குகளை நோக்கிய பிரிவுகளால் செய்யப்பட்ட பங்களிப்புகளின் விரிவான பார்வையை வழங்குகிறது. |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 1 | முகாமைக் கணக்கீட்டிற்கான அறிமுகம், தீர்மானமெடுத்தலில் தொடர்புடைய கிரயம், இடர் மற்றும் நிச்சயமற்ற தன்மையின் கீழ் தீர்மானமெடுத்தல் | 18% | 36 |
| 2 | செயன்முறைக் கிரயவியலும் டிஜிடல் கிரயவியலும் | 15% | 30 |
| 3 | வெவ்வேறு வகையான பாதீடுகள், திட்டமிடல் மற்றும் கட்டுப்படுத்தல் *எதிர* பாதீடிடல். | 15% | 30 |
| 4 | நியமக் கிரயவியல் மற்றும் முரண் பகுப்பாய்வு | 15% | 30 |
| 5 | மூலதன மூலங்களும், மூலதனக் கிரயமும் | 10% | 20 |
| 6 | முதலீடுகளின் மதிப்பீடு | 15% | 30 |
| 7 | தொழிற்படு மூலதன முகாமைத்துவம் | 5% | 10 |
| 8 | முகாமைக் கணக்கீட்டில் சமீபத்திய அபிவிருத்திகள் | 7% | 14 |

| தூண் | சட்டம், வரிவிதிப்பு மற்றும் கணக்காய்வு |
|---|---|
| தொகுதிக் குறியீடு | RCA 3803 இடர், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு |
| தொகுதியின் நோக்கம் | இந்தப் பாடநெறி மாணவர்களுக்கு ஆளுகை வேலைச்சட்டகங்கள், நிறுவன இடர் முகாமைத்துவம், நிறுவன வணிகச் செயன்முறைகள், கணக்காய்வு நடைமுறைகள், மற்றும் உள்ளகக் கட்டுப்பாடுகளைப் புரிந்து கொள்வதற்குத் தேவையான ஆழமான அறிவு, திறன்கள், மற்றும் ஆற்றல்களை வழங்குகிறது. இது நிதிக் கூற்றுக் கணக்காய்வுகளை நடத்துவது மற்றும் அறிக்கையிடுவது தொடர்பான இலங்கை கணக்காய்வு நியமங்களை உள்ளடக்குகிறது. இது மாறும் வணிகச் சூழலில் வலுவான உள்ளக மற்றும் வெளிப்புற ஆளுகையை உறுதி செய்கிறது. மேலும், இப்பாடநெறி, டிஜிடல் மாற்றத்தின் தாக்கம் மீது கவனம் செலுத்தி கணக்காய்வில் டிஜிடல் முன்னேற்றங்களையும் நிலைபேற்றுத்தன்மையையும் வலியுறுத்துகிறது. மேலும், இது நெறிமுறை மற்றும் தரத் தேவைப்பாடுகளை எடுத்தியம்புகிறது. எதிர்கால நிபுணர்கள் அவர்களின் கணக்காய்வு மற்றும் நிதிசார் நடைமுறைகளில் நேர்மை, மற்றும் பொறுப்புக்கூறும் தன்மையுடன் சிறந்து விளங்குவதற்கான மிகவுயர்ந்த தரங்களை நிலைநிறுத்துகிறது. |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 1 | ஆளுகை வேலைச்சட்டகம் | 05% | 10 |
| 2 | வணிக நிறுவனங்களில் வணிகச் செயன்முறைகள் | 20% | 40 |
| 3 | இடர் முகாமைத்துவ வேலைச்சட்டகமும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளும் | 20% | 40 |
| 4 | உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களும் தொடர்புடைய சேவைகளும் | 05% | 10 |
| 5 | இடர் மதிப்பீடு, கணக்காய்வுச் செயன்முறை மற்றும் கணக்காய்வு அறிக்கையிடல் | 25% | 50 |
| 6 | நிறுவன இடர் முகாமைத்துவத்தின் (ERM) அடிப்படைகள் | 10% | 20 |
| 7 | உள்ளகக் கணக்காய்வின் அடிப்படைகள் | 08% | 16 |
| 8 | நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வுக்கான நெறிமுறைத் தேவைகளும் தரம்சார் தேவைகளும் | 07% | 14 |

STUDENTS' GUIDE

| தூண் | LEGAL, TAXATION & AUDITING |
|---|---|
| தொகுதிக் குறியீடு | CPT 3804 — நிறுவன மற்றும் தனிநபர் வரியியல் |
| தொகுதியின் நோக்கம் | இந்தத் தொகுதியானது நிருவாக நடைமுறைகள் உட்பட இலங்கையில் உள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களுக்குரிய அவசியமான வரிவிதிப்பு அறிவை வழங்குகிறது. மாணவர்கள் வரிக் கோட்பாடுகள் பற்றியும் அறக்கட்டளைகள், பங்குடமைகள், தரும ஸ்தாபனங்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற உரிமங்களின் வரிவிதிப்பு பற்றியும் கற்றுக் கொள்வர். பிரதான தலைப்புகளில் பெறுமதிசேர் வரி (VAT), நிறுத்திவைத்தல் வரி (WHT), மூலதன நய வரி, மற்றும் பங்குப் பரிவர்த்தனை வரி, முத்திரைத் தீர்வை, சுற்றுலா அபிவிருத்தி வரி, சமூகப் பாதுகாப்புப் பங்களிப்பு வரி போன்ற பல்வேறு தீர்வைகளும் உள்ளடங்குகின்றன. இப்பாடநெறி பசுமை வரிகள், கார்பன் கிரடிட்கள், மற்றும் சூழல் - நேய வணிகங்களுக்கான ஊக்கத் தொகைகள் போன்ற நிலைத்தன்மை முயற்சிகளில் கவனஞ் செலுத்தி, வரிவிதிப்பில் சர்வதேச அபிவிருத்திகளையும் ஆராய்கிறது. மேலும், நவீன வரி நடைமுறைகள் தொடர்பில் மாணவர்கள் புதுப்பிக்கப்பட்ட நிலையில் இருப்பதற்காக, டிஜிடல் வரிவிதிப்பு உட்பட டிஜிடல்மயமான வரி முகாமைத்துவம், இணக்கம், நெறிமுறைக் கருத்தாய்வுகள், மற்றும் வளர்ந்துவரும் போக்குகளை இந்தப் பாடநெறி உள்ளடக்குகிறது. |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 1 | இலங்கை வரிவிதிப்புக்கான அறிமுகம் மற்றும் வரிவிதிப்பின் வளர்ந்துவரும் போக்குகள் | 07% | 14 |
| 2 | வருமான மூலங்கள் | 30% | 60 |
| 3 | தனிநபர்கள் மற்றும் கம்பனிகளின் (வதிவிட) வருமான வரி மதிப்பீடு | 20% | 40 |
| 4 | நானாவித முயற்சிகளின் வரிவிதிப்பு | 10% | 20 |
| 5 | கடப்பாடுகளும் நடைமுறைகளும் | 10% | 20 |
| 6 | நிறுத்திவைத்தல் வரியும் (WHT) மூலதன நய வரியும் | 08% | 16 |
| 7 | பெறுமதிசேர் வரியும் (VAT) வணிகத்தின் பிற வரிகளும் | 15% | 30 |

| PILLAR | DIGITAL & COMMUNICATION |
|---|---|
| MODULE CODE | BC 305 — Business Communication [200 Notional hours] |
| MODULE AIM | நிலை II அல்லது III-இல் தேவைப்படும் 12 பாடங்களுக்குக் கூடுதலாக வழங்கப்படும் இந்தத் துணைப் பாடநெறியானது, வணிகத் தொடர்புத் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது ஒரு தொழில்முறைச் சுழலில் முதலாளியின் எதிர்பார்ப்புகளைப் புர்த்திசெய்யும் வகையில், திறம்பட்ட வணிகத் தொடர்பை உறுதிசெய்து, கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் மற்றும் விளக்ககாட்சி அளித்தல் ஆகியவற்றில் மாணவர்களின் தேர்ச்சியை வளர்ப்பதில் கவனம் செலுத்துகிறது. |

| அலகு | கற்றல் தலைப்புகள் | முக்கியத்துவம் | உத்தேச மணித்தியாலங்கள் |
|---|---|---|---|
| 1 | உரையாடல் திறன் | 20% | 40 |
| 2 | வாசிப்புத் திறன் | 20% | 40 |
| 3 | வணிக எழுதும் திறன் | 20% | 40 |
| 4 | செயல்பாட்டு இலக்கணம் | 15% | 30 |
| 5 | வணிக விளக்கக்காட்சி திறன்கள் | 15% | 30 |
| 6 | வேலை நேர்காணல் திறன்கள் | 10% | 20 |

# AAT பரீட்சைக்கு தயாராகுதல்



**பிரத்தியேக வகுப்புக்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்கள்**

இ.க.தொ கழகமானது மாணவர்களை AAT பரீட்சைகருக்கு தயார்டுத்தும் நோக்கில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் கொழும்பில் வகுப்புக்களை நடாத்துகின்றது.

